பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127]

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 23 சனிக்கிழமை (07-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 208

## பாலியல் வல்லுறவைக் கண்டித்து

* வடக்கு கிழக்கில் ஹர்த்தால் * மலையகத்தில் பிரார்த்தனை
* கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

# ஆட்டம்காணும் அரசுக்கு பலத்த அடி

# வரலாறு காணாத பெரும் வெற்றி

## யாழ்.குடா முற்றாகச் செயலிழந்தது

(நமது நிருபர்)

ஸ்ரீலங்கா படையினரால் தொடர்ச்சியாக தமிழ்ப் பெண்கள் மீது மிருகத்தனமான முறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களையும், மற்றும் அடிப்படை மனித உரிமை மீறல், சித்திர வதைகளையும் கண்டித்து நேற்று அனுஷ்டிக்கப் பட்ட பூரண ஹர்த்தாலினால் வடக்குக் கிழக்குப் பகுதிகள் முற்றாகச் செயலிழந்து காணப்பட்டுள்ளதுடன், வரலாறு காணாத பெரு வெற்றியையும் அளித்துள்ளது.

தமிழ்ப் பெண்கள் மீது அரச படையினர் தொடர்சியாக மேற்கொண்டு வரும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களையும், மற்றும் சித்திரைவதைகளையும் கண்டித்து நேற்று வடக்குகிழக்கில் பூரண ஹர்த்தாலும், மலையகத்தில் பிரார்த்தனையும் கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டமும் 10 தமிழ் முஸ்லிம் கட்சிகளின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை, மன்னார் உட்பட வடக்குக் கிழக்கில், நேற்று தமிழ், முஸ்லிம் மக்களினால் அனுஷ்டிக்கப்பட்ட இக் ஹர்த்தாலினால் அப்பகுதிகளின் செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

யாழ் குடா நாட்டில் யாழ்ப்பாணம், நெல்லியடி சுன்னாகம், பருத்தித்துறை, அச்சுவேலிப் பகுதிகளில் உள்ள வர்த்தக நிறுவனங்

[8-ம் பக்கம் பார்க்க]

## கரும்புலிகளுக்கு தலைவர் பிரபா அஞ்சலி

(வவுனியா)

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் இடம்பெற்ற கரும்புலிகள் தின வைபவத்தின் போது கரும்புலிகளின் திருவுருவப்படங்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நேரில் சென்று மலர்மாலை அணிவித்து ஈகைச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

வன்னிப்பிரதேசத்தில் பெயர்குறிப்பிடப்படாத மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது இவ்வைபவத்தில் கரும்புலிகள் புலிப்படைத் தளபதிகள், போராளிகள் ஆகியோர் பெருமளவில் கலந்து கொண்டனர். கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வைபவத்தில் " மிக இக்கட்டான காலகட்டத்தில் படைகளை எதிர்த்துத் தாக்கி விடுதலைப்போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியவர்கள் கரும்புலிகளே என்று தலைவர் பிரபாகரன் கூறியிருந்தார். [ம]

## வவுனியா நகரம் வெறிச்சோடியது

(வவுனியா)

மருதானை சோதனைச் சாவடியில் இளம் தமிழ்ப் பெண் மீது பொலிஸார் மேற்கொண்ட பாலியல் வல்லுறவுச் சம்பவத்தையும், அடிப்படை மனிதஉரிமை மீறல் சம்பவங்களையும் கண்டித்து நேற்று வவுனியாவில் இடம்பெற்ற ஹர்த்தால் பூரண வெற்றியளித்துள்ளதாக வவுனியாச் செய்தியாளர் அறிவித்துள்ளார்.

10 தமிழ், முஸ்லிம் கட்சிகள் கூட்டாக விடுத்த வேண்டுகோளை அடுத்து இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது;

ஹர்த்தால் அனுஷ்டிப்

(8ம் பக்கம் பார்க்க)

### நம்பிக்கையில்லாபிரேரணைமீதானவிவாதம்

## முடிவு எட்டப் படாத நிலையில் கட்சித்தலைவர்களின் கூட்டம் முடிவு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கை இல்லாப் பிரேரணைமீதான விவாதத்தை எப்போது நடத்துவது என்பது தொடர்பான கட்சித் தலைவர்களுக்கான கூட்டம் முடிவெதுவுமின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்களுக்கான கூட்டம் முடிவெதுவும் எட்டப்படாத நிலையில் எதிர் வரும் வியாழக்கிழமைக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

நம்பிக்கை இல்லாப் பிரேரணை மீதான விவாதம் இம்மாதம் 3ஆம் வாரத்திலேயே நடத்தபபடவேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சி அழுங்குப் பிடியாக உள்ளது.

ஆனால் இம்மாதம் 3 ஆம் வாரத்தில நம்பிக்கை இல்லாப் பிரேரணை மீதான

(8-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் திஸநாயக்கா விரைவில் கட்சியிலிருந்து வெளியேற்றம்?

### அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின செயலாளரும், அமைச்சருமான எஸ். பி. திஸநாயக்காவை கட்சியின் செயலாளர் பதவியிலிருந்தும், அமைச்சர் பதவியிலிருந்தும் விலக்கும் நடவடிக்கைகளில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளதாக தெரியவருகிறது.

தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பாக அமைச்சர் திஸநாயக்கா அண்மைக் காலமாக தெரிவித்து வரும் கருத்துக்களை அடுத்தே அவரைக் கட்சியிலிருந்து வெளியேற்றும் முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கருந்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை அமைச்சர் திஸநாயக்கா ஆளுங்கட்சியைச் சேர்ந்த சில எம பிக்களுடன் விரைவில் எதிர்க்கட்சி வரிசைக்குச் செல்லலாமெனவும் ஊகங்கள் அடிபடத் தொடங்கியுள்ளது.

இதுஇவ்வாறிருக்க, அமைச்சர் மகிந்த ராஜபக்ஸவை சுதந்திரக்கட்சியின் செயலாளராக நியமிக்கும் நடவடிக்கைகள் தீவிரமாக இடம் பெற்று வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. (ந)

## எதிர்க்கட்சி வரிசையில் 115 எம்.பிக்கள்

பாராளுமன்றக் கூட்டத் தொடர்நேற்றுக்கூடியபோது எதிர்க்கட்சி வரிசையில்115 எம்பிக்களும் ஆளும்கட்சியில் 109 எம்பிக்களும் அமர்ந்திருந்தனர். அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை இம்மாதம்18ந்திகதி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளுமாறு 115எம்பிகளும் சபாநாயகரிடம் கோரவுள்ளனர். (ந)

### பாராளுமன்றகூட்டத்தொடரை

## இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்க முயற்சி?

(கொழும்பு)

நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை ஒகஸ்ட் 7ம்திகதியே விவாதத்திற்கு எடுக்க வேண்டும்என்று அரசாங்கம் பிடிவாதமாகஇருக்கும் அதேவேளை பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஜனாதிபதி 2 மாதங்க

[8 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

மன்னார் கறுக்காய் குளம் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் 3 எல்லைப்படை வீரர்

[8 ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

யாழ் இந்து மாணவன் சோமேஸ்வரப்பிள்ளை மகிந்தன் தனது விசேட அடையாள அட்டை (0906002838) பாடசாலை அடையாள அட்டை இவ்விரண்டையும் தவறவிட்டுள்ளார். கண்டெடுத்தவர்கள் ஆனைப்பந்தி மெதடிஸ் பாடசாலையிலோ, மல்லாகம் நீதிமன்றிலோ ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3314)

### வீடு விற்பனைக்கு

நல்லூர் மாநகர சபை எல்லைக்குள் உட்பட்ட பகுதியில் 1½ பரப்பு காணிக்குள் அமைந்திருக்கும் சகல வசதிகளுடனும் கூடிய அடக்கமான வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 42, சந்தான மாதா கோவில் வீதி, பாண்டியன் தாழ்வு. கிழமை நாட்களில் பார்வையிடும் நேரம் மாலை 5.00 மணிக்கும் சனி முழு நேரமும். (3313)

### அ. அட்டை கண்டெடுப்பு

[யாழ்ப்பாணம்]

95, நாயன்மார் வீதி, நாயன்மார்கட்டு, நல்லூர் என்னும் முகவரியைச் சேர்ந்த இராசரட்ணம் பரதகுமார் என்பவரது அடையாள அட்டைகள் அடங்கிய கவர் கண்டெடுக்கப்பட்டு 'வலம்புரி' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். (செ)

---

### வேலைவாய்ப்பு வழங்குவதில்

# அரசின் புறக்கணிப்புகள் தொடருமாயின் அகிம்சைப் போராட்டங்களில் ஈடுபடுவோம்

### யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

பலத்த போட்டியின் மத்தியில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு பட்டம் பெற்று வெளியேறிய நிலையில் வேலைவாய்ப்பின்றி பல வருடங்களாக அலைந்து கொண்டிருக்கும் யாழ் மாவட்டப் பட்டதாரிகள் ஆகிய நாம் விரக்தி அடைந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதை நீக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லையென்றால் நாம் அகிம்சை வழியிலான போராட்டங்களில் ஈடுபடும் நிலைக்குத் தள்ளப்படுவோம்.

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் அண்மையில் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இச்செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

இடம்பெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தின் மத்தியில் பல சொல்லொணாத் துன்பங்களைச் சுமந்து பல்கலைக்கழகங்களில் கல்விகற்று ஏறத்தாழ 3 வருட காலமாக எந்த விதமான தொழில் வாய்ப்பும் இன்றி 900 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் எமது சங்கத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில் எமது அவல நிலை தொடர்பாகப் பல தடவைகள் நாம் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் எடுத்துக் கூறிய போதும் எந்தவிதமான பயனும் இதுவரை ஏற்படவில்லை.

அண்மையில் வடகிழக்கு மாகாண சபையினால் வழங்கப்பட்ட ஆசிரிய நியமனங்களில், பாடத்துறைகள் ரீதியான பாகுபாட்டினால் 97 ஆம் ஆண்டில் பட்டம் பெற்று வெளியேறிய 25 இற்கு மேற்பட்ட பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மாகாணக்கல்வி அமைச்சு அதிகாரிகள், மற்றும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு பல தடவைகள் எடுத்துக்கூறியும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை இதற்கான காரணம் யாது?

ஆசிரிய நியமனங்களில் பலதரப்பட்ட பிரிவினர்கள் உள்வாங்கப்படும்போது பட்டதாரிகள் புறக்கணிக்கப்படுவது ஏன் என எமக்குப் புரியவில்லை. (உ)

---

### அமைதிப்படை என்ற பெயரில்

# தமிழ்மக்களைக் கொன்று குவித்த போது இல்லாத கரிசனை இப்போது எப்படி வந்தது?

### இந்தியாமீது சிங்கள ஜாதிக சங்கமய தலைவர் பாய்ச்சல்

[கொழும்பு]

சமாதானத்திற்கு ஈடாக வேறேதும் இல்லை என்று இந்தியா தெரிவித்திருப்பது கபடம் நிறைந்தது. மாறாக நட்பு ரீதியானதல்ல என்று சிங்கள ஜாதிக சங்கமயவின் தலைவர் எஸ் எல். குணசேகர தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் நிகழும் குண்டு வீச்சுக்கள் தொடர்பாக இந்தியா வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், சமாதான முயற்சிகளுக்கும் 'பெரும் ஏமாற்றம்' அளிக்கும் நிகழ்வாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்திய அமைதிப் படைகள் இங்கிருந்த போது இந்த நிலைப்பாட்டை இந்தியா எடுத்திருக்கவில்லை.

அவர்கள் தமிழ் மக்களைக் கொன்றபோது அது சரியாக இருந்தது நாங்கள் கொன்றால் தவறாக இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் டாக்டர் ஜெஹான் பெரேரா இது பற்றிக் கருத்துக் கூறுகையில்,

வடபகுதியில் பிரச்சினை ஒன்றிருப்பதாக தென் பகுதிக்குக் காண்பிக்கும் பிரசாரம் ஒன்றை அரசாங்கம் இப்போது மேற்கொண்டு வருகிறது.

அத்துடன் அரசியற் செயற்பாடுகளுக்குரிய காலம் இதுவல்ல என்று உணர்த்துவதற்கும் விரும்புகிறது எனத் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, விமானக் குண்டு வீச்சு சமாதான நடவடிக்கைகளை நிரந்தரமாக பாதிக்கக்கூடியது என விடுதலைப் புலிகள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

---

# கேள்வி அறிவித்தல்

### பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) யாழ்ப்பாணம்

1. கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள், யாழ்ப்பாணம் கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச்சபையினரால் 2001ஆம் ஆண்டு ஆடிமாதம் 31ஆந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிவரை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு தரம் - எம் 9 இலும் அல்லது அதற்கு மேற்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்று எந்திரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப்பணத்தை யாழ்ப்பாணம், கடற்கரைவீதியில் அமைந்துள்ள பிரதம எந்திரி அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 2001ஆம் ஆண்டு ஆடிமாதம் 24ஆந்திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை நிறைவேற்று எந்திரியிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் |
| --- | --- | --- |
| 1. பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சமையலறை மின்இணைப்பு திருத்தவேலை | ரூ 2000 00 | ரூ 250 00 |
| 2. அளவெட்டி வைத்தியசாலை மின்இணைப்பு திருத்தவேலை. | ரூ 2500 00 | ரூ 250 00 |
| 3. நெடுந்தீவு வைத்தியசாலையில் சிகிச்சை நிலையம் நிர்மாணித்தல். | ரூ 8000 00 | ரூ 500 00 |

5. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். இவை தொடர்பான மேலதிக விபரங்களை நிறைவேற்று எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாண அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதம பொறியியலாளர்,
யாழ்ப்பாணம்

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம்,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

(C/2185)

---

### ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்தி

# அழிவுப்பாதையில் இருந்து நாட்டை மீட்டெடுப்போம்

### பேரியல் அஷ்ரப் கூவல்

(அம்பாறை)

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதி சந்திரிக்காவின் தலைமைத்துவத்தை அங்கீகரித்து சமாதானத்திற்காக அவர் முன்னெடுத்துச் செல்லும் திட்டங்களுக்கு முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு தேசிய ஐக்கிய முன்னணி உறுதி அளித்துள்ளது.

அம்பாறை நகர சபைமண்டபத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய ஐக்கிய முன்னணியின் பேராளர் மகாநாட்டின் போது அமைச்சர் பேரியல் அஷ்ரப் மேற்கொண்ட உறுதிமொழியை அளித்துள்ளார்.

தேசிய ஐக்கிய முன்னணியின் இந்தப்பேராளர் மகாநாட்டிற்கு நாட்டின் பல பாகத்திலிருந்தும் சுமார் 4 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

இம்மகா நாட்டில் அமைச்சர் பேரியல் அஷ்ரப் தொடர்ந்து உரையாற்றுகையில்;

தற்போதுள்ள பிரச்சினையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு ஜனாதிபதியின் கரத்தைப் பலப்படுத்தவேண்டும்.

இதற்கு கட்சியின் முழுப் பலத்தையும் பிரயோகிக்கப் போவதாகவும் பேரியல் அஷ்ரப் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

---

### பிடிபட்ட

# நீர்க்காகத்தைகொண்டுவர படையினரின் அனுமதியில்லை

(சுண்டுக்குளி)

மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளை அகப்பட்ட நீர்க்காகத்தைவீட்டுக்கு எடுத்துச் சென்றமீனவர்படையினரால் தாக்கப்பட்டதுடன் நீர்க்காகமும்பறித்துபறக்கவிடப்பட்டது.

நேற்று முன்தினம் பாஷையூர்ப் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மீன்பிடிக்கும்வலையில் அகப்படும் நீர்க்காகங்களை மீனவர்கள் வீட்டிற்கு எடுத்து வந்து கறிசமைத்து உண்பது வழக்கமயாயினும்,

படையினரின் இந்தப் புதிய நடைமுறை குறித்து மீனவர்கள் கவலைவெளியிட்டுள்ளனர். (உ-110)

## இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில்

# கடமையாற்றிய 400 பேருக்கு

# மீண்டும் வேலைவாய்ப்பு வழங்கப்படும்

### உயர் அதிகாரிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சீமெந்துக்கூட்டுத்தாபனத்தில் கடமை புரிந்துவந்த ஊழியர்களுள் சுமார் 400 பேருக்கு மீண்டும் வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட துறையின் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; கைத்தொழில் அமைச்சின் கீழ் செயற்படடுவரும் இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் கடமைஆற்றிய ஊழியர்கள் பெருமளவினர் 1993 ஆம் ஆண்டிலிருந்து வேலைவாய்ப்பை இழந்துள்ளனர்

இவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க பல்வேறுமட்டங்களால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் பயனளிக்கவில்லை

இதேவேளை இந்தியாவில் இருந்து சீமெந்தை கப்பல் மூலம் இறக்குமதி செய்து அவற்றை பைக்கற்றுகளில் அடைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அதற்காக வேலையற்றிருக்கும் மேற்கூறப்பட்ட 400 ஊழியர்களும் பணிக்கு அமர்த்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன் துறையில் இப்பணி விரைவில் நடைபெறும் என்றும், இது சம்பந்தமான ஏற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் குடாநாட்டில் மாதம்ஒன்றுக்கு ஒரு இலட்சம் பைக்கற் சீமெந்து தேவைப்படுவதாகவும் இவைகள் அனைத்தும் கொழும்பிலிருந்தே சப்பல்மூலம் இறக்குமதிசெய்யப்படுவதாகவும் தெரிவித்த மேற்படி அதிகாரிகள் பைக்கற்செய்யும் தொழில் காங்கேசனில் ஆரம்பிக்கப்பட்டவுடன் யாழ்ப்பாணத்தில் சீமெந்தை குறைந்தவிலையில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளனர்;

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் கீழ் சீமெந்துக் கூட்டுத்தாபனம் கொண்டு வரப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-06)

## மருதனார்மடம்

# சந்தைக்குப் புதிய கட்டடத் தொகுதி

[இணுவில்]

மருதனார்மடம் பொதுச் சந்தையில் புதிய கட்டடத் தொகுதி மற்றும் சுற்றுமதில், நீர்த்தாங்கி என்பன அமைப்பதற்காக முதற்கட்டமாக வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு தனது நிதியிலிருந்து 20 இலட்சம் ரூபாவினை வழங்கியுள்ளது.

இதனையடுத்து புனரமைப்புப் பணிகள் யாவும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வலி தெற்கு பிரதேச சபைத் தலைவர் கமலசேகரன் தெரிவித்தார்.

அத்துடன், சந்தைக்கு அருகாமையில் கலாசார மண்டபம், தமது பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் கல்வி, கலாசார மற்றும் வீதி அமைப்புப் பணிகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைக்கப்பட்டு வருகின்ற வாழ்வக கட்டட அமைப்புக்கு 12 இலட்சம் நிதியையும் நான் அமைப்பு ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-49)

# மு. கா. வை கைப்பற்ற தே. ஐ. மு கங்கணம்

[கொழும்பு]

''விரைவில் முஸ்லிம் காங்கிரஸையும் கைப்பற்றுவோம் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவர் எம். எல். ஏ. எம் ஹிஸ்புல்லா சூளுரைத்துள்ளார்.

நேற்று முன்தினம் அம்பாறையில் நடைபெற்ற தே. ஐ. முவின் பேராளர் மாநாட்டில் உரையாற்றிய ஹிஸ்புல்லா பலருடைய தியாகத்தால் வளர்த்தெடுக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸை சுயநலவாதிகளிடம் இருந்து பாதுகாக்கும் போராட்டம் தொடரும் என்றும் முஸ்லிம் காங்கிரஸை கைப்பற்றி காப்பாற்றுவோம் என்றும் கூறினார்;

தே. ஐ. முவின் இம்மாநாட்டில் அமைச்சர் பேரியல் அஷ்ரப், யூ. எல். எம். மொகிதீன், ஹனிபா மருதூர்க்கனி, விமலவீரதிஸநாயக்க, தே. ஐ. முவின் செயலாளர் எம். ஐ. எம். ரபீக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(உ-8)

# இராசி பலன்

07 07 2001
(ஆனி 23, சனி)
துதியை ந.இ 11 53 வரை
உத்தராடம் பி ப12.49 வரை
ராகுகாலம் 9 58 - 10 20
நல்ல நேரம் 2.58-4 28
சித்தம்

**மேடம்**

தொழில் மேன்மை, அதிகாரம், கடின உழைப்பு, சுப நிகழ்வு.

**இடபம்**

புதிய திட்டம் ,வீண் பயம், வயிற்றுக் கோளாறு, காரிய தாமதம்;

**மிதுனம்**

தேவையற்ற பிரச்சினை, வியாதி, பிரயாண பயம், காரியத் தடங்கல்.

**கடகம்**

போசன சுகம், சுவாரஸ்யம், திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு.

**சிங்கம்**

வியாதி குணமடையும், தனவரவு, சந்தோசம், நன்மைவிருத்தி.

**கன்னி**

தாழ்வு நிலை, வியாபாரச் சிறப்பு, மனச்சஞ்சலம், உடல் வியாதி,

**துலாம்**

தாய்வழி உறவு, தன்னம்பிக்கைக் குறைவு, நிலை மாற்றம், பிரியம்.

**விருச்சிகம்**

காரியம் கைகூடும், இனிய சம்பவம், தனவரவு, அந்நியர் சந்திப்பு.

**தனுசு**

பொருள் விரயம், வீண் வாதம், கௌரவக் குறைவு, முயற்சி தாமதம்.

**மகரம்**

ஜனவசியம், சயன சுகம், காரிய நன்மை, நல்லமுயற்சி.

**கும்பம்**

வீண் அலைச்சல், தனவிரயம், சயன சுகக் குறைவு, காரிய தாமதம்,

**மீனம்**

தனவரவு, தெய்வ சிந்தை காரிய நன்மை, நண்பர்கள் சந்திப்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

# துக்கநிவாரண அட்டகம்

ஏகதயாபரன் ஈசன் இடப்புறம்
ஏற்றருள் பைரவி ஈஸ்வரியே
ஆகமரூபிணி அமரர் அடி தொழும்
அன்னையே ஜெகதம்பிகையே
நாகராஜனுண பூஜித வல்லபை
நாகபூஷணி நலமருள்வாய்
ரோக நிவாரணி பாபவிமோசனி
துக்க நிவாரணி நாகம்மே.

★ ★ ★

செங்கமலத்தவள் காளி சரஸ்வதி
சேர்ந்த முச்சத்தி திரியம்பிகையே
மங்கள ரூபிணி மந்ர சொரூபிணி
மாரி குமாரி நாகேஸ்வரியே
ஐங்கரன் ஆறுமுகன் அன்னையே கன்னியர்க்
கண்டிய தோசம் அகற்றிடுவாய்
ரோக நிவாரணி பாபவிமோசனி
துக்க நிவாரணி நாகம்மே

★ ★ ★

பொங்கலை என வரும் அன்பர்தம் துயர்கெட
புவனமெலாம் அருள் பூத்தவளே
சங்கரி சூலினி சண்டினி மாலினி
சங்கரன் தேவியே சாம்பவியே
சிங்கநல் வாகன மீதிவர்ந்தே துயர்
தீர்த்தருள் செய்யும் திரிபுரையே
ரோக நிவாரணி பாபவிமோசனி
துக்க நிவாரணி நாகம்மே.

★ ★ ★

கனந்தரும் பூங்குழல் உமையவளே எமைக்
காத்திட வந்தருள் காமாட்சி
தனந்தரும் கல்வியும் தளர்வறும் உள்ளமும்
தந்தருள் தண்ணளிக் கண்ணியளே
தினந்தினம் நின்பதி சென்று தொழுதழும்
சேயெமக்கே வழி செய்திடுவாய்
சோக நிவாரணி பாபவிமோசனி
துக்க நிவாரணி நாகம்மே.

★ ★ ★

மயிலை நிகர்விரி அழகபாரத்துடன்
மதியணிந்திட்ட மனோன்மணியே
கயிலை மலைப்புறக் காட்சி தந்தே கண்
களித்திடச் செய்திடும் காமாட்சி
அயிலை இணைத்திடு படைக்கலம் ஏந்தியே
அடியரைக் காத்திடும் அபிராமி
ரோக நிவாரணி பாபவிமோசனி
துக்க நிவாரணி நாகம்மே.

★ ★ ★

குங்கும நித்தில கோமள யாமனைக்
கொஞ்செழில் சேர் குண பூஷணியே
சங்கக் கரத்தவன் சோதரியே நீலி
சத்வ குணந்தருந்துர்க்கையளே
இங்கெமை வாட்டிடும் இன்னல் பறந்திட
ஈடில்லா ஞானக் கதிரெறிப்பாய்
ரோக நிவாரணி பாபவிமோசனி
துக்க நிவாரணி நாகம்மே.

★ ★ ★

தேவி கடம்பவி ஸ்ரீ புவனேஸ்வரி
ஸ்ரீ லலிதாம்பிகே செந்தமிழே
நாவிலும் நெஞ்சிலும் நர்த்தனமாடிடும்
நாகராஜேஸ்வரி நாரணியே
பாவி எமக்கு நின் பத்மபதந் தொழும்
பக்குவந் தந்தருள் பார்பதியே
ரோக நிவாரணி பாபவிமோசனி
துக்க நிவாரணி நாகம்மே.

★ ★ ★

நாடுவளம் பெற நம்மினம் சீர்பெற
நாகவணையமர் நாரணியே
வாடும் மனத்துயர் வீடுபெற வென
வான்மழை போல வரம் பொழிவாய்
சூடுமதி நதி நாதர் துணை தர
சூலப் படையுடன் நீ வருவாய்
ரோக நிவாரணி பாபவி மோசனி
துக்க நிவாரணி நாகம்மே.

சிவகுரு பரராசசிங்கம்

## தமது நிலைப்பாட்டை விளக்கி

# கீழ் உழைப்பு பட்டதாரிகள் சங்கம் அமைச்சர் டக்ளஸுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

காலத்திற்குக் காலம் மத்திய அரசாலும், மாகாண அரசாலும் அரச சேவையில் உள்ள பட்டதாரிகள் விபரம் கோரப்படுகின்றது.

ஆனால் இதுவரை எமக்கு பொருத்தமான பதவிகளோ பதவி உயர்வுகளோ வழங்கப்படவில்லை. எமது தகைமைகள், திறமைகள் என்பன தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. இதனால் எமது ஆற்றல் மழுங்சடிக்கப்படுவதுடன் தொழில் புரியும் அலுவலகங்களில் பெரும் பின்னடைவுகளைச் சந்திக்கின்றோம்:

அரச சேவை கீழ் உழைப்பு பட்டதாரிகள் சங்கம் தமது நிலைப்பாடு தொடர்பாகவும், அதனைமாற்றியமைக்கக் கோரியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அம் மகஜரில், மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அரசசேவைசார் கீழ் உழைப்பு பட்டதாரிகளுக்கு உடனடி நிவாரணமாக பல்கலைக்கழகத்தில் வழங்கப்படுவது போன்று பட்டம் பெறற திகதியில் இருந்து குறைந்தது 3 சம்பள ஏற்றங்களாவது வழங்கப்பட வேண்டும்.

கீழ் உழைப்பு பட்டதாரிகளான எமக்கு திட்டமிடல் உதவிப்பணிப்பாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், நூலக அபிவிருத்தி உத்தியோகத்தர், உள்ளூராட்சி உதவியாளர் போனற பதவிகள் வழங்கப்பட வேண்டும்,

இலங்கை நிர்வாக சேவைப் போட்டி பரீட்சையில் குறிப்பிட்ட வீத இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்(உ)

## உடுப்பிட்டித் தொகுதி

# ஸ்ரீ.சு.க. அமைப்பாளர் கிரனேற் வீச்சில் பலி

(புலோலி)

நெல்லியடிச் சந்தையில் நேற்று முன்தினம் இரவுஇடம் பெற்ற கிரனேற் வீச்சுச் சம்பவதில் பலியான துன்னாலையைச் சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளர் மயில்வாகனம் ஜெயக்குமார் (வயது32) எனபவரதுசடலம் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவர் புளொட் அமைப்பின் முன்னாள் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவத்தில் படையினர் இருவர் காயமடைந்ததாகவும் தெரியவந்துள்ளது.

(உ-23-52)

## க. பொ. த. உயர் தர மாணவர்க்கான

# உயிரியல்

## பாட வினாக்கள் - 21

### ஆசிரியர்: ஜே. சுகந்தன் BSC

**வினா-1**

**கீழே தரப்படும் விலங்குகளை இரு கிளைச் சாவி முறையைக் கொண்டு பாகுபடுத்தவும்.**

1) இறால் நட்சத்திர மீன், Hydra, கணவாய், மண்புழு, மட்டைத்தேள்.
2) தேரை, ஓணான், பாம்பு வண்ணாத்துப் பூச்சி, நுளம்பு, வீட்டு ஈ கிளி, அணில், நத்தை.
3) நட்சத்திர மீன், Hyd a சுறா, திமிங்கிலம், மீன் கொத்திப் பறவை, இறால் நண்டு, Nereis, மண்புழு.
4) Cycas ang sperm Nephrolepis, Sellaginella, காளான், poganatum Nepenthes, Vanda.
5) சூரை, சுறா, திருக்கை, பாரை, கிரி மீன், கெழுறு, குப்பிளா, நெத்தலி, ஜப்பான் மீன், விரால், பால்மீன், மணலை, பறக்கும் மீன், கீலவாழை.
6) தேனீ, கரப்பான், யானை, ஈ, கொறில்லா, நுளம்பு, வெளவால், திமிங்கிலம்.
7) நட்சத்திர மீன், கடல் அணிமணி, Nereis நண்டு. Barnacle.

**வினா-2**

**கீழே தரப்படும் அங்கிகளுக்குரிய இரு கிளைச் சாவியை பூரணப்படுத்துக.**

1 இருவால்வி, மண்புழு அட்டை, நெமற்றோடு, இறால், நத்தை, நட்சத்திர மீன் நாடாப்புழு.

1 a) உடலின் உருவம் புழு போன்றது... —
b உடலின் உருவம் புழுப் போன்றதல்ல...... —
2 a உடலின் ஒரு முனையில் கீடகச்சென்னி காணப்படும்... —
b கீடகச் சென்னி இல்லை...... —
3 a உடலின் இரு முனையிலும் உறிஞ்சி உண்டு...... —
b உறிஞ்சிகள் இல்லை... ——
4 a) சிலிர் முட்களும் கட்டுச் சேணமும் உண்டு .. ——
b) சிலிர் முட்களும் கட்டுச் சேணமும் இல்லை... —
5 a உடலின் வெளிப்புறத்தில் தெளிவான துண்டுபடல் காணப்படும்... —
b உடலின் வெளிப்புறத்தில் தெளிவான துண்டுபடல் இல்லை
6 a ஆரைச் சமச்சீர் உண்டு... —
b) ஆரைச் சமச்சீர் இல்லை———
7 a) ......நத்தை
b) ......இருவால்வி

2) வீட்டு ஈ, கடல் அனிமணி, நாடாப்புழு. Nematoda அட்டை

1 a) பரிசக் கொம்புடைய உடல்......— -
b பரிசக் கொம்பு அற்ற உடல்... ——
2 a) உறிஞ்சிகள் உள்ள உடல்...——
b) உறிஞ்சிகள் அற்ற உடல் ——
3 a) உறிஞ்சிகள் இரு முனையிலும் காணப்படும்——
b) உறிஞ்சிகள் உடலின் ஒரு முனையாக மட்டும் காணப்படும ——
4 a) சிறகுகள் உண்டு——
b) சிறகுகள் இல்லை——-

## விடைகள்

**வினா இல-14**

(தொடர்ச்சி)

**C) இழையுருப்பிரிவின் முக்கியத்துவம்:-**

★ பிறப்புரிமையமைப்பை நிலைபெறடையச் செய்தல் அதாவது Genome இனை அடுத்தடுத்த சந்ததிகளில் மாறாது பேணப்படும்.
★ வளர்ச்சி நிகழ உதவும்.
★ கல மாற்றீடு செய்ய உதவும்.
★ புத்துயிர்ப்பு நிகழ உதவும்.
★ இலிங்கமில் முறை இனப்பெருக்கத்தில் உதவும்.

**ஒடுக்கற்பிரிவின் முக்கியத்துவம்:-**

★ இலிங்கமுறை இனப்பெருக்கமடையும் அங்கிகளில் அடுத்தடுத்த சந்ததிகளுக்கிடையே நிறமூர்த்த எண்ணிக்கை மாறாது பேண உதவும்.
★ மாறல்களை ஏற்படுத்தும் முக்கிய மூல முதலாகும்.
★ கூர்ப்பின் மூலம் புதிய இனம் உண்டாக வழிவகுக்கும்.

d) ★ குறுக்குப் பரிமாற்றம் நிகழல். சாரபற்ற தனிப்படுத்துகை.

e ★ குறித்த இனம் தப்பிப்பிழைக்க அவசியமானது. மாறலால் பிறப்புரிமை வேறுபாடுடைய அங்கிகள் தோன்றும் சூழல் காரணிகள் மாற்றமடையும் போது இக் காரணிகளுடன் ஒத்துப் போகக் கூடிய அங்கிகள் தப்பிப் பிழைக்க ஏனையவை இறக்கும். தப்பிப் பிழைக்கும் அங்கிகள் விரைவாக இனப்பெருக்கமடைந்து அச் சூழலில் கூர்ப்பில் முன்னேற்றமான குடித்தொகை உண்டாகும். இயற்கைத் தேர்வு நிகழ உதவும்.

f ★ விகாரம்
★ இலிங்கமுறை இனப்பெருக்கம்.

**G) D.D.T க்கு எதிர்ப்புள்ள நுளம்பு உருவாகியமை.**

**லாமாக்கின் கருத்துப்படி:-** DDT இனைத் தொடர்ந்து விசிறும் போது நுளம்பின் உடல் கலங்களில் விகாரம் ஏற்பட்டதால் DDT இனை எதிர்க்கும் இயல்பு தோன்றி இவ் இயல்பு அடுத்தடுத்த சந்ததிகளுக்குக் கடத்தப்பட்டதாலே DDT க்கு எதிர்ப்புள்ள நுளம்புகள் தோன்றின.

**டாவினின் கருத்துப்படி:-** DDT க்கு எதிர்ப்புள்ள நுளம்புகளும், எதிர்ப்பற்ற நுளம்புகளும் சூழலில் காணப்பட்டன DDT இனை விசிறும் போது எதிர்ப்புள்ளவை தப்பிப் பிழைக்க எதிர்ப்பற்றவை இறந்தன. இதனால் அச் சூழலில் எதிர்ப்புள்ள நுளம்புக்குடித்தொகை அதிகரித்தது.

**ஒட்டகச்சிவிங்கி நீண்ட கழுத்தைப் பெற்றமை**

**லாமாக்கின் கருத்துப்படி:-** ஆரம்பத்தில் சூழலில் குறுகிய கழுத்துடைய ஒட்டகச்சிவிங்கிகளே காணப்பட்டன. சூழலில் வரட்சி காரணமாக சிறிய செடிகள், சிறிய மரங்கள், புற்கள் இறக்க உயரமான மரங்களிலிருந்து இலை, குழைகளைப்பெற வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால் கட்டைக்கழுத்தைத் தொடர்ச்சியாக நீட்டியதால் (பாவிப்பு பாவிப்பின்மை) நீண்ட கழுத்துடைய ஒட்டகச்சிவிங்கி தோன்றியது. இப் பெற்ற இயல்பு தலைமுறையுரிமைபடைந்ததாலே தற்போதுள்ள நீண்ட கழுத்துடைய ஒட்டகச்சிவிங்கிகள் தோன்றின.

**டாவினின் கருத்துப்படி:-** ஆரம்பத்தில் சூழலில் குறுகிய கழுத்துடைய நீண்ட கழுத்துடைய ஒட்டகச் சிவிங்கிகள் காணப்பட்டன. சூழலில் வரட்சி ஏற்பட்டதால் உணவின்றி குறுகிய கழுத்துடைய ஒட்டகச்சிவிங்கிகள் இறந்தன. நீண்ட கழுத்துடைய ஒட்டகச் சிவிங்கிகள் அங்குள்ள உயரமான மரங்களிலிருந்து உணவைப் பெற்று உண்டதால் அவை தப்பிப் பிழைத்து தற்சமயம் நிலையாக உள்ளன.

h) லாமாக்கின் பாவிப்பு பாவிப்பின்மை, பெற்ற இயல்புகள் தலைமுறையுரிமையடைதல் போன்ற இயல்புகள் பிழையென Weismann ஓர் பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தினார் இதற்கு இவர் தொடர்ச்சியாகப் பல சந்ததிகளுக்கு எலிகளின் வாலை வெட்டிய போதிலும் வாலுடைய எலிகளே தோன்றின. லாமாக்கின் கொள்கை உண்மையாயின் வாலற்ற எலிகளே தோன்றியிருக்க வேண்டும். இதனை அடிப்படையாகக்கொண்டு Weisman மூலஉயிர் முதலுருக் கொள்கையை முன்வைத்தார். அக்கொள்கையின்படி, ஒவ்வொரு உயிரியும் உடல் முதலுருவாலும் மூல உயிர் முதலுருவாலும் ஆக்கப்பட்டிருக்கும். உடல் முதலுரு அழியக் கூடியது. இது மறு சந்ததிக்கு எவ்வித பங்களிப்பையும் ஏற்படுத்துவதில்லை உயிர் முதலுருவே மறு சந்ததிக்குரிய உயிர் முதலுருவையும் உடல் முதலுருவையும் ஆக்கும். உயிர் முதலுருவில் ஏற்படும் மாறல்களே அடுத்த சந்ததிக்குக் கடத்தப்படும் உடல் முதலுருவில் ஏற்படும் மாறல்கள் அடுத்த சந்ததிக்குக் கடத்தப்படாது.

**வினா இல- 15**

**வினா இல - 1**

1) i. உயிர்க்கலங்களில் தொகுக்கப்பட்டு அங்கு அனுசேபத் தாக்கங்களை ஊக்குவிக்கும் ஊக்கியாகச் செயற்படும் கோளப் புரதம்.

ii. ● இவையாவும் புரதங்களாகும்
● கீழ்ப்படைக்குத் தனித்துவமானவை
● நொதியம் மிகக்குறைந்த செறிவிலே தொழிற்படும்
● நொதியத் தாக்க வீதமானது வெப்பநிலை, PH நொதியச் செறிவு, கீழ்ப்படைச் செறிவு என்பவற்றால் பாதிக்கப்படும்
● உயர் வெப்ப நிலையில் அமைப்பழிவுக்குள்ளாகும்
● வன்காரம், வன்னமிலம், பார உலோகம் ஆகியவற்றால் நொதியத்தாக்கம் பாதிக்கப்படும்
● நொதியங்கள் தாக்க முடிவில் அவற்றின் அமைப்பிலோ அளவிலோ மாற்றமடையாமல் காணப்பட்டு தொடர்ந்தும் கீழ்ப்படையுடன் தாக்கமடையும்.
● நொதியத் தாக்கம் மீளக் கூடியது
● நொதியங்கள் யாவும் கோளப்புரதங்களாகும்
● சில நொதியங்கள் தொழிற்பட ATP அவசியம்
● சில நொதியங்களின் தொழிற்பாட்டுக்கு நொதியத்தின் புரதப் பகுதியுடன் புரதமற்ற பகுதியும் தேவையாகும். இப் புரதமற்ற பகுதி துணைக்காரணி எனப்படும் துணைக் காரணிகள் 3 வகைப்படும்

1) அசேதன அயன்கள் :- $mg^{2+}$ $c_u^{2+}$, $cl^-$

2) துணை நொதியங்கள் :- நொதியத்துடன் தளர்வாக இணைந்துள்ள புரதமற்ற பகுதியாகும்
உதாரணம்:-NADN ADP, துணைநொதியம் A, ATP

3) சங்கலிதக் கூட்டம்:- நொதியத்துடன் இறுக்கமாக இணைக்கப்பட்ட புரதமற்ற பகுதியாகும்
உதாரணம்:- FAD, FMN, Heam

iii) நொதியங்கள் கீழ்ப்படைக்குத் தனித்துவமானவை நொதியம் கீழ்ப்படையுடன் சேர்ந்து குறுகிய கால வாழ்தகவுள்ள நொதியக் கீழ்ப்படைச்சிக்கலை உருவாக்கும் இச்சிக்கலிலுள்ளே நொதியத்திற்கும் கீழ்ப்படைக்கும் இடையே தாக்கம் நிகழும். தாக்கம் பூரணமானதும் இச் சிக்கலில் இருந்து விளைபொருட்களும் நொதியமும் பெறப்படும் இங்கு பெறப்படும் நொதியம் மாற்றமடையாது காணப்படுவதுடன் புதியகீழ்ப்படையுடன்தாக்கமடைய வெனச்சுயாதீனமாகக் காணப்படும்.

iV **தயற்றேசுக் கரைசலின் தொழிற்பாடு**
5ml 10% மாப்பொருள் கரைசல் 5ml 10% தயற்றேசுக்கரைசல் என்பவற்றைத் தனித்தனியாக வெவ்வேறு சோதனைக் குழாய்களில் எடுக்கப்பட்டு அவை 10 பாகை C வெப்பநிலையில் உள்ள நீர்த்தொட்டியுள் வைத்திருக்கப்படும். இரண்டும் மேற்படி வெப்ப நிலையை அடைந்ததும் ஒன்றுடன் ஒன்று கலந்து நிறுத்தற் கடிகாரம் உடனடியாக ஆரம்பிக்கப்படும். தாக்கக் கலவையானது கலக்கியால் இடை இடையே கலக்கப்பட்டு அதே வெப்ப நிலை பேணப்படும். தாக்க கலவையில் இருந்து துளிக்கும் குழாய் மூலம் ஒவ்வொரு நிமிடமும் ஓர் துளி வீதம் எடுக்கப்பட்டு பொட்டு ஓட்டின மீது இடப்பட்டு ஒரு துளி $KI/I_2$ கரைசல் இட்டு மாப்பொருள் இருப்பது பரிசோதிக்கப்படும். மாப்பொருளானது தயற்றேசு கரைசலால் குளுக்கோசாக மாற்றப்படும் அயடின் கரைசலுடன் நிறமாற்றம் ஏற்படாத சந்தர்ப்பத்தில் நிறுத்தற்கடிகாரம் உடனடியாக நிறுத்தப்பட்டு தாக்கம் நடை பெற எடுத்த நேரம் (t) அறியப்படும். இதே போன்ற செயல் முறை 20 பாகை c, 30 பாகை c, — — — 60 பாகை c ஆகிய வேறுபட்ட வெப்ப நிலையில் தனித்தனியாக மேற்கொள்ளப்படும் எல்லாச்சந்தர்ப்பத்திலும் நொதியத்தினதும் கீழ்ப்படையினதும் செறிவு மாறாமல் பேணப்படும்.

(6 ஆம் பக்கம் பார்க)

## அறிமுகமும் விமர்சனமும்

(யாழ்ப்பாணம்)

தாயகம் கலை இலக்கிய சஞ்சிகை அறிமுகமும் விமர்சன அரங்கும் இன்று காலை 9-30 மணிக்கு புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரிமண்டபத்தில்சட்டத்தரணி சி.சிவனேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கருத்துரைகளை கவிஞர் இ.முருகையன் விரிவுரையாளர் க.வேல்நம்பி சட்டத்தரணி சே,தேவராசா இளைப்பாறிய ஆசிரியர் வே:இளையகுட்டி ஆகியோர் வழங்கவுள்ளனர். (உ)

## உயிலங்குளத்தில் 7 படையினர் காயம்

[வவுனியா]

மன்னார் உயிலங்குளம் பகுதியில் புதன் காலை விடுதலைப் புலிகளுக்கும்,இராணுவத்தினருக்கும இடையில்ஏற்பட்ட மோதல்சம்பவமொன்றில்ஏழு இராணுவத்தினர்படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதலின் போது ஏற்பட்ட மேலதிக சேதவிபரங்கள் தெரியவரவில்லை. [ம]

## வீதி திருத்தமில்லை

(ஈச்சமோட்டை)

யாழ் கொய்யாத்தோட்டம் புதுவீதி நீண்டகாலமாக திருத்தஞ் செய்யப்படாததனால், இவ்வீதியால் பயணஞ்செய்வோர் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

சம்பந்தப்பட்டோர் இவ் வீதியை திருத்தம் செய்தால் பயணிகளின் சிரமம் தீரும் என பொதுமக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

(செ-59)

## வீதியில் வைத்து தாக்குதல்

(மந்திகை)

வீதியில் வைத்து மனைவியால் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டவர் பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தாக்கப்பட்டுக் காயமடைந்தவர் 5 பிள்ளைகளுக்குத் தந்தையாவார். அவர் தனது குடும்பத்தை விட்டுப் பிரிந்து வேறோர் இடத்தில் வாழ்ந்து வந்தமையாலேயே கோபமுற்ற மனைவி அவ்வாறு தாக்கினார் எனத் தெரியவந்துள்ளது:

(உ-23)

## மேலும் 3,500 அபி. தொண்டர் இணைப்பு

(இணுவில்)

யாழ். குடாநாட்டில் இவ் வருடமும் 3 ஆயிரத்து 500 அபிவிருத்தித் தொண்டர்களைச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளில் வடச்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு ஈடுபட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது; (உ-49)

## தேர்தலை எதிர்கொள்ள தயார்

[கொழும்பு]

ஒக்டோபர் மாதத்தின் பின்னர் தேர்தல்கள் நடைபெறலாம் என்று எழுந்துள்ள ஊகங்களுக்கு மத்தியில் அதனை எதிர்கொள்ளும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சுதந்திரக் கட்சியின் இணைப்பாளர்களாக மாவட்டத்திற்கு ஒவ்வொருவரை நியமித்திருப்பதாக அறியப்படுகிறது.

(உ)

## இன்று ஒரு தகவல்

# தன்வினை தன்னைச்சுடும்

மன்னன், பொன்னன் என்ற இருவர் அண்ணன் தம்பிகள், ஒரு கிராமத்தில் வாழ்ந்தார்கள். மன்னன் இரக்கமில்லாத அரக்கனைப் போன்றவன். துர்க்குணக்குவியல், பாவம் என்றால் அவனுக்குப் பாயா சம்பொன்னன் நற்குணசீலன். அன்பும் பண்பும் படைத்தவன். தெய்வ சிந்தனையுடையவன். மன்னன் மனைவியின் வாய், காதுவரையில் நீண்டிருக்கும் பொன்னனையும் அவன் மனைவியையும் நஞ்சாக வெறுத்தாள்.

ஒருநாள் மன்னன் 'தம்பி! இனியும் நாம் சேர்ந்திருப்பது நல்லதல்ல; நீ வேறாகப்போய்விடு மச்சுவீடு எனக்கு புல்வீடு உனக்கு. புல் வீட்டில் பனியிறங்காது. வெய்யிலின் கொடுமை இருக்காது. அன்றிக் கறவைப் பசு எனக்கு இருக்கட்டும், மலட்டுமாடு உனக்கு இருக்கட்டும். பால் கறக்கும் துன்பம் உனக்கு இருக்காது. நன்செய் நிலம் எனக்கு, புன்செய் நிலம் உனக்கு, என்றான். பொன்னன் இதைக் கேட்டு ஒன்றும் மறுத்துச் சொல்லவில்லை' அண்ணா உனக்கு எதுவிருப்பமோ அது என் பாக்கியம் என்றான்.

பொன்னன் புல் வீட்டில் குடியேறி வயல்வேலை செய்து கஞ்சியும் கூழும் குடித்துத் தெய்வ பக்தி செய்து கொண்டிருந்தான். மலட்டு மாடு புல் இன்றி இளைத்து இறந்துவிட்டது அதன் தோலை எடுத்து டமாரமாகச் செய்து, அடுத்த நகரிலுள்ள கோயிலில் விற்றால் பணம் வரும் என்று டமாரத்தை எடுத்துக் கொண்டு சென்றான். வழியில் பொழுது போயிற்று, அடர்ந்த காடு விலங்குகளுக்கு அஞ்சி ஒரு மரத்தின் மீது ஏறி அச்சத்தால் நடுங்கிக் கொண்டிருந்தான்.

நடுஇரவில் இருகள்ளர்கள் ஒரு பெரிய தனவந்தன் வீட்டில் திருடிக் கொண்டு வந்தவர்கள், அம்மரத்தின் கீழ் அமர்ந்து களவு எடுத்த பொன்னாபரணங்களையும், பவுண் காசுகளையும் பங்கிட்டுக் கொள்ளமுயன்றார்கள். மரத்தின் மீதிருந்த பொன்னன் கைகால் நடுங்கிட டமாரத்தை நழுவ விட்டான். டமாரம் கிளைகளில் பட்டு 'டமால் டுமீல்' என்ற சத்தம் எழுந்தது கள்ளர்கள் நம்மை யாரோ பிடிக்க வந்தார்கள் என்ற அச்சத்தால் பயந்து. திருடி வந்த பொருள்களை விட்டு விட்டு ஓடி ஒளிந்தார்கள். பொன்னன் டமாரம் உடைந்து விட்டதோ? என்ற கவலையால் மரத்தை விட்டு இறங்கிப் பார்த்தான். டமாரம் உடையாமலிருந்தது. அதன் அருகில் தங்க அணிகலங்களையும் பவுண் காசுகளையும் கண்டான், ஆ! என்று அதிசயம் அடைந்தான் டமாரத்தைத் தோளில் மாட்டிக் கொண்டு, நகைகளையும் பவுண்களையும் மூட்டை கட்டித் தலை மீது வைத்துக் கொண்டு அச்சத்துடன் வீட்டிற்கு வந்தான்.

ஓடிய கள்ளர்கள் சிறிது நேரம் பொறுத்து அங்குவந்து பார்த்தார்கள். அங்கே ஒன்றுமில்லை, நாம் தான் திருடர்கள்; எவனோ நம்மையும் ஏமாற்றி நம்மிடம் திருடிக் கொண்டு பானான், இவனைக்கண்டு பிடித்து உதைக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வாடிய மனத்துடன் சென்றார்கள், மறுநாள் அதிகாலை தன் குடிசையில் தங்கக் காசுகளைப் பொன்னன் எண்ணிக் கொண்டிருப்பதை ஜன்னல் வழியாக மன்னன் பார்த்து அதிசயமடைந்தான், உள்ளே போய் அன்புள்ள தம்பி! இவை ஏது என்றான் அண்ணா! இவை வந்த விபரத்தை ஏன் கேட்கின்றாய்? உனக்கு வேண்டுமென்றால் இதில் பாதியெடுத்துக் கொள்' என்றான் பொன்னன் தம்பி! நான் உன்னிடம் வாங்கிக் கொள்ளப் பிச்சைக்காரனா? வந்த வகையைச் சொல்லு என்றான் மன்னன்

அண்ணா! என் மலட்டு மாடு செத்துப்போச்சு அதன் தோலை உரித்து டமாரம் செய்து அடுத்த ஊரில் உள்ள ஆலயத்தில் விற்கலாம் என்று சென்றேன் இருட்டி விட்டது அக்காட்டில் ஒரு மரத்தின் மேல் ஏறியிருந்தேன். அங்கு கள்வர்கள் வந்து, இவைகளை எண்ணிப்பங்கிட முயன்றனர். நான் பயந்து நடுங்கி டமாரத்தை நழுவ விட்டேன். அதன் ஓசையைக் கேட்ட கள்ளர்கள் பயந்து ஓடிவிட்டார்கள், நான் இறைவன் தந்த அருள் என்று இவைகளை எடுத்து வந்தேன். இதுதான் நடந்தது என்றான்.

மன்னன் 'நல்லது இதே மாதிரி நானும் செய்து பொருளைப் பெறுவேன்' என்றுகூறி தனது கறவைப் பசுவை வெட்டித் தோலை உரித்து டமாரம் செய்து கொண்டு தம்பி சொன்ன அடையாளத்தைத் தெரிந்து, காட்டுக்குப்போய் அந்த மரத்தின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டிருந்தான் நடு இரவில் கள்வர்கள் திருடிக் கொண்டு வந்து, அம்மரத்தின் கீழ் மூட்டைகளை வைத்தார்கள். மன்னன் டமாரத்தைக் கீழே விட்டான். டம் டும் என்ற ஓசை உண்டாகியது. கள்ளர்கள் ஓடாமல் பந்தத்தைக் கொழுத்திப்பார்த்தார்கள். மரத்தின் மீதுள்ள மன்னனைக் கண்டு சீறி, அவனைப் பிடித்து அடித்து எலும்பு ஒடிய நொறுக்கிக் காதை அறுத்து விரட்டினார்கள். மன்னன் மிகுந்த வேதனையுடன் வீட்டுக்கு வந்தான் மருத்துவம் செய்துதேறினான்: தன்வினை தன்னையே சுட்டது.

நன்றி
அறநெறி!

---

### யாழ்ப்பாணத்தில்
# போமலின் தெளித்த மீன்கள் விற்பனை

(யாழ்ப்பாணம்)

போமலின் தெளிக்கப்பட்ட மீன்கள் யாழ்ப்பாணப் பகுதியில் விற்பனை செய்யப்படுவதாக பாவனையாளர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வகை மீன்களை உட்கொள்பவர் நோய் உபாதைக்கு உட்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

போமலின் இறந்தோரின் உடல்களைப் பழுதடையாமல் பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் மருந்து என்பது குறிப்பிடத்தக்கது. (ஊ)

### மலத்தியோன் விசிறல்

(மல்லாகம்)

சுன்னாகம் சந்தி வர்த்தக நிலையங்களையண்டி அமைந்துள்ள கால்வாய்களில் ஈ, நுளம்புப் பெருக்கங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் மலத்தியோன் விசிறப்பட்டு வருகிறது. (உ-122)

---

### கோப்பாய் கோட்டப் பாடசாலைகளில் நிலவுகின்ற
# ஆசிரியர் பற்றாக்குறை நீங்க
# தொண்டர் ஆசிரியர் நியமனத்தை வழங்குக
## கோட்டக்கல்வி அதிகாரி வேண்டுகோள்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையினை நீக்குவதாயின், நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்ட தொண்டர் ஆசிரியர்களின் நியமனத்தைத் துரிதப்படுத்த வேண்டும் என கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் இ சிவஞானசுந்தரம் வலியுறுத்திக்கூறியுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற கோப்பாய்க்கோட்ட அதிபர்கள், வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளர்கள் இடையேயான கலந்துரையாடலில் மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது.

கோப்பாய்க் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 54 ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சென்றுள்ள நிலையில் தற்போது இப் பாடசாலைகளில் 89 ஆசிரியர்களுக்குத் தேவைப்பாடு இருப்பதாகவும்,

நீண்ட நாட்களாகச் சிற்றூழியர், காவலாளிகள் பற்றாக்குறை நிலவுவதாகவும் இவற்றை நிரப்புவதற்கான நடவடிக்கை இதுவரை மேற்கொள்ளப்படாமையினால் அதிபர்கள் மிகுந்த இடர்ப்பாடுகளை சந்திக்க வேண்டியிருப்பதாகவும்,

பாடசாலைகளில் நிலவும் கட்டடப் பற்றாக்குறை நிலைதறித்தும் கோட்டக் கல்வி அதிகாரியினால் இக் கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப்பட்டது.

வலி. கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம் இவற்றுக்குப் பதிலளித்துப் பேசுகையில்,

இக்கோட்டப் பாடசாலைகளான அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத் திருத்த வேலைக்கென 5 இலட்சம் ரூபாவும்,

இருபாலை சி. சி. த. க. பாடசாலைக்கு 5 இலட்சம் ரூபாவும், கந்தவேள் அ. த. க. பாடசாலைக்கு 1 இலட்சம் ரூபாவும், கோப்பாய் மகாவித்தியாலயத்திற்கு 1 இலட்சம் ரூபாவும், நாவலர் வித்தியாலயத்திற்கு 7 இலட்சம் ரூபாவும், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திற்கு 9 இலட்சம் ரூபாவும், பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்திற்கு 1 இலட்சம் ரூபாவும், அச்சுவேலி தோப்பு அருள்நந்தி வித்தியாலயத்திற்கு 1 இலட்சம் ரூபாவும் புனரமைப்புப் பணிகளுக்கென ஒதுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார். (உ-79)

---

## மேலதிக சிகிச்சை

(மந்திகை)

பாம்பு தீண்டிய நிலையில் இருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிகச் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மீசாலையைச் சேர்ந்த கோபாலகுமார் (வயது 36), வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ். சுரேஸ்குமார் (வயது 32) ஆகிய இருவருமே வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (உ-23)

## நீர்வேலியில் விளையாட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளி வருடாந்த விளையாட்டு நிகழ்வு இன்று பிற்பகல் 2.00 மணியளவில், நிலைய முன்றலில் இடம் பெறவுள்ளது.

சமாதான நீதிபதியும், விலைக்கட்டுப்பாட்டு அதிகாரியுமான ந. சிவசீலன் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் வலி-கிழக்குப்பிரதேசசபைத் தலைவர் பூ. குணசிங்கம் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார். (க)

---

### பருத்தித்துறைக் கடலில்
# இயந்திரபடகில்மீன்பிடிக்க மீண்டும் தடை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் இயந்திரப் படகுகள் மூலம் மீன்பிடிப்பதற்கு படையினர் தடைவிதித்துள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இயந்திரப் படகு மூலம் மீன்பிடிக்க படையினர் வழங்கிய அனுமதியை பாதுகாப்புக் காரணங்களுக்காக இடை நிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

மீன்பிடி இயந்திரப்படகுகள் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதுடன் விசாரணைகளை மேற்கொண்டபின்னர் மீனவர்களிடம் படகுகள் ஒப்படைக்கப்பட்டன.

படையினரின் இத்தகைய நடவடிக்கையினால் மீனவர் குடும்பங்கள் மிகமோசமாகப் பாதிப்படைந்துள்ளன. [இ-10]

---

### கடமையில் இருந்த
# படைவீரர் சகாவால் சுட்டுக் கொலை

(மந்திகை)

எழுதுமட்டுவாள் முன்னரங்ககாவல் நிலையில் கடமையிலிருந்த இராணுவ வீரர் அவரது சகாவால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி எழுதுமட்டுவாள் மருதன் குளம பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அம்பலாங்கொடையைச் சேர்ந்த லயன் ஸ்கோப்ரல் எல். சொய்ஷா என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

சம்பவம்பற்றி கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றுநீதவான் அன்னலிங்கம் பிறேம் சங்கரின் கவனத்தின் கீழ் கொண்டுவந்ததையடுத்து நீதவான் விசாரணையை மேற்கொண்டார்.

மரணமான படை வீரரின் பிரேத பரிசோதனையை கொழும்பு மாவட்ட சட்டவைத்திய அதிகாரியும், மரண விசாரணையை கொழும்பு நகர திடீர்மரண விசாரணை அதிகாரியும் மேற்கொண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (உ-23)

---

# நோர்வேயின் சமாதான முயற்சி மீண்டும் தொடர நடவடிக்கை
## புதிய சமாதானக்குழு அமைப்பு

(கொழும்பு)

தற்போது தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை மீண்டும் நோர்வே அரசு முன்னெடுத்துச் செல்வதற்கு நோர்வேயின் பிரதி வெளிநாட்டமைச்சர் றேமன்ட் ஜோகான்சன் தலைமையில் புதிய குழுவொன்றை நோர்வே அரசு நியமித்துள்ளது.

பிரதிஅமைச்சர் தலைமையில் நியமிக்கப்பட்ட புதிய குழுவில் கடந்த இரண்டு வருடங்களாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான ஏற்பாட்டாளராக செயற்பட்டு வந்த எரிக்சோல்ஹெய்ம் கொழும்பில் உள்ள நோர்வேயின் தூதுவர் ஜோன்வெஸ்பேர்க் நோர்வேயின் வெளிநாட்டமைச்சின் நிறைவேற்று அதிகாரி ஜேர்ஸ்டிட்ரெம்ஸ்டால் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

நோர்வே அரசினால் நியமிக்கப்பட்டுள்ள இக்குழு தொடர்பாக வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கருத்துத் தெரிவிக்கையில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையிலான சமாதான முயற்சியில் நோர்வே அரசு ஈடுபடுவதை இலங்கை அரசு வரவேற்கிறது என்று கூறியுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான சமாதான முயற்சியில் நோர்வேயின் உயர்மட்டக்குழு கலந்து கொள்ள வேண்டுமென்று ஜனாதிபதி நோர்வே அரசைக் கேட்டுக் கொண்டதின் பிரகாரம் நோர்வேபிரதி வெளிநாட்டமைச்சர் கொழும்பு வந்திருந்தமை தெரிந்ததே.

நோர்வே அரசினால் நியமிக்கப்பட்டுள்ள புதியசமாதானக் குழுவை விடுதலைப் புலிகள் அங்கீகரித்துள்ளனரா என்பது பற்றி இதுவரை தெரியவில்லை. (வ)

# நல்லெண்ண நடவடிக்கையாக
# பாக். கைதிகளை இந்தியா விடுவிப்பு

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப்பின் இந்தியப்பயணத்தையொட்டி இந்தியாவிலுள்ள பாகிஸ்தானியர்களை விடுதலை செய்ய இந்திய அரசு முன்வந்துள்ளது.

நல்லெண்ண அடையாளமாக 400 க்கு மேற்பட்ட மீனவர்களையும் மற்றும் சிறைக் கைதிகளையும் விடுதலை செய்ய இந்தியா முன் வந்துள்ளது.

எனினும் தவறுதலாக இந்தியக் கடல் எல்லைக்குள் வரும் பாகிஸ்தான் மீனவர்களைத் திருப்பி அனுப்புவதென்று இந்தியா முடிவு செய்துள்ளது.

இதேவேளை இந்திய தொழில் நுட்பங்களைக் கற்க விரும்பும் பாகிஸ்தான் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கவும் இந்திய மத்திய அரசு முன்வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (து)

## தேர்தல் அதிகாரிக்கு பணி மாற்ற உத்தரவு

முதல்வர் ஜெயலலிதாவின் வேட்புமனுவை ஆண்டிப்பட்டித் தொகுதியில் நிராகரித்த தேர்தல் அதிகாரி ஜெயம் பணி மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

இப்பொழுது அவர் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது

ஜெயலலிதா அரசில் இச்செயல் பழி வாங்கும் ஒரு நடவடிக்கையாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

## உதவி பிரதமர் நியமிப்பு

(பக்தாத்)

ஈராக்கின் உதவிப் பிரதமராக அகமட் உசைனை அந் நாட்டு ஜனாதிபதி சதாம் ஹுசைன் நியமித்துள்ளார்.

இவருடன் சேர்த்து ஈராக்கில் மூவர் உதவிப் பிரதமர்களாகப் பதவிவகிக்கிறார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

கரெக் அசேஸ், கிக்மட் நெஸ்மான் இம்ராகிம் ஆகிய 2 பேருமே மற்றைய உதவிப் பிரதமர்களாவர். (உ-7)

## இஸ்ரேல் பிரதமர் ஐரோ. நாடுகளுக்கு இருநாள் பயணம்

இஸ்ரேலியப்பிரதமர் ஏரியல் ஷரோன் தனக்கு ஆதரவு தேடி ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இரண்டு நாள் பயணமாக முதலில் ஜேர்மன் பேர்லினைச் சென்றடைந்த இவர் தொடர்ந்து பல நாடுகளுக்குச் செல்லவுள்ளார்.

மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் மிடையில் சமாதான உடன்படிக்கைச் சாத்திடப்படவுள்ள இவ்வேளையில் இஸ்ரேல் பிரதமரின்விஜயம் நல்ல ஒரு எதிர்காலத்தை உருவாக்கும் என்று அரசில் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (து-7)

## வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஸ்ரீசொர்ண சித்தி பஞ்சமுக விநாயகர் அருட்டாமாலையும் அம்பாள் திருக்கதவு திறந்தருளப் பாடிய திருப்பதிகமும் வெளியீட்டு விழா நாளை பி. ப. 4 00 மணிக்கு மேற்படி ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (செ)

## தமிழகத்தில் நிலவிய பதற்றம் குறைகிறது

(சென்னை)

முன்னாள் தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி மற்றும் மத்திய அமைச்சர்கள் அத்துமீறி கைது செய்யப்பட்டமை பற்றி மத்திய அரசு அனுப்பியிருக்கும் கடிதத்தைத் தமிழக அரசு அலட்சியம் செய்யாது என்று தான் நம்புவதாக மத்திய ஊடக வளர்ச்சித்துறை அமைச்சர் வெங்கையா நாயுடு தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில்; தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும் மத்திய அரசின் எச்சரிக்கையை காவல்துறை மதித்து நடக்குமென்றும் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்; கடந்தசில வாரங்களுக்கு முன் ஏற்பட்ட பதற்றம் மத்திய அரசின் தலையீட்டால் குறைந்திருப்பதாகவும்,

மாநிலத்தில் குடியரசு தலைவர் ஆட்சிக்குப் பரிந்துரைக்கப்படவில்லையென்றும் மத்திய அரசு படிப்படியாக தமிழகஅரசுமேல் அழுத்தங்கள் கொடுக்கும் என்றும்

இறுதிக் கட்டத்துக்கு 356 ஆம் பிரிவை நடைமுறைப் படுத்த வேண்டிவருமென்றும் தெரிவித்தார். (து)

## பதவி நீக்கப்பட்ட தமிழக ஆளுநர் திருவனந்தபுரம் பயணம்

(சென்னை)

பதவி நீக்கப்பட்ட தமிழக ஆளுநர் செல்வி பாத்திமாபீவி நேற்று முன் தினம் தமிழகத்தை விட்டு புறப்பட்டுச் சென்றார்.

நேற்று முன்தினம் காலை சென்னையில் இருந்து திருவனந்தபுரம் நோக்கிதனி விமானம் ஒன்றில் புறப்பட்ட பாத்திமாபீவியை முதலமைச்சர் ஜெயலலிதா மாநில அமைச்சர்கள் தமிழக அரசின் தலைமைச் செயலர் காவல்துறை தலைவர் உட்பட பலர் விமானநிலையம் சென்று வழியனுப்பி வைத்தனர்.

ஆளுநர்என்ற முறையில்தன்னிடம எதிர்பார்க்கப்பட்ட அனைத்தையும் தான் நிறைவேற்றியதாகவும், நான் எங்கிருந்தாலும் தமிழ்நாட்டு மக்களுக்காக பாடுபடுவேன் என்றும் புறப்படமுன் செல்வி பாத்திமாபீவி கூறியுள்ளார். (உ-8)

## பரீட்சைக்கென பணம் அறவிடக் கூடாது

(கோப்பாய்)

இரண்டாம் தவணைப் பரீட்சைக்கென மாணவர்களிடம் கட்டணங்கள்எதுவும் அறவிடக்கூடாது எனயாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ மகாலிங்கம் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாகப் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

பரீட்சைகள் யாவும் பாடசாலை மட்டத்திலேயே நடத்தப்பட வேண்டுமெனவும் ஒரு பாடசாலையின் வினாத்தாளோ, கோட்டமட்ட வினாத்தாளோ இன்னொரு பாடசாலைக்குக் கொடுக்க முடியாது எனவும் இதன் மூலம் பணம் சம்பாதிக்கக் கூடாது எனவும் வடக்கு-கிழக்கு மாகாணசபை அறிவித்துள்ளது. (க-79)

## அமெரிக்காவுடன், உறவை மேம்படுத்த ஈரான் முயல வேண்டும்

அமெரிக்கா-ஈரான் உறவுகளில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் அதற்கான முயற்சிகளை ஈரானே மேற்கொள்ள வேண்டுமென அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் கூறியுள்ளார்.

அமெரிக்காவுடனான ஈரானின் உறவுக்கு ஈரானிய இளம் சமுதாயமே தடையாக இருக்கிறது என்ற ஈரானின் குற்றச் சாட்டை கொலின் பவல் மறுத்துள்ளார்;

இதே வேளை, ஈரானிய மக்களினால் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப் பட்டுள்ள சீர்திருத்த வாதியான முகமட் கடாமியின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை தான் உன்னிப்பாக கவனிப்பதாகவும் கொலின்பவல் தெரிவித்துள்ளார். (உ-7)

## நாட்டுக்கூத்து . . . . .

7 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் இதற்கான ஒற்றுமை இன்னும் எதிர்க்கட்சிகள் மத்தியில் இல்லை ம வி மு இதுபற்றி உத்தியோகபூர்வமாக முடிவெதனையும் அறிவிக்கவில்லை. ம வி. முன்னணியுடன் உடன்பாடு ஏற்பட்டு நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெற்றாலும்கூட புதிய ஒரு அரசை ஐ தே கவுடன் இணைந்து அமைப்பதற்கு அவர்கள் முன்வரப்போவதில்லை ஐ.தே.க. வின் பேச்சாளர்

கருணாசேன கொடித்துவக்கு நம்புவதுபோல அரச தரப்பிலிருந்து இறுதிநேரத்தில் கட்சிமாறி வரக்கூடியவர்கள் இருந்தால் மட்டுமே புதிய அரசொன்று அமைக்க வேண்டிய பெரும்பான்மை ஐ தே க.வுக்குக்கிடைக்கும். இது இவ்வாறிருக்க, எதிர்க்கட்சி அரசொன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி இடமளிப்பாரா என்ற கேள்வியும் இருக்கிறது; இந் நிலையில் ஒரு பெரும் அரசியல் குழப்பம் ஏற்படுவது சாத்தியமானது ராவூப்ஹக்கீம் எதிர்பார்த்தது ம. இப்போதுபல அமைச்சர்கள் மட்டத்தினர் விரும்புவதும் .ஜி. எல். பீரிஸ்-ரணில் இரகசிய பேச்சுக்களில் குறிப்பிடப்படும் நெருக்கடிகால ஒத்துழைப்பு என்னும் சொற்றொடரினால் புரியப்படுவதுமான சர்வகட்சிகளும் பங்கு பற்றும் தேசிய அரசாங்கம் அமைவதற்கான உட்கட்டுமானம் தயார் செய்யப்படாத நிலையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை அர்த்தமுள்ளதாகாது. நாட்டைக் குழப்பிக் கூத்துப்பார்க்கும் செயலாகவே இருக்கும் இப்படித்தான் ஹக்கீம் சிந்திக்கிறார் என்பது அவரது அறிக்கையிலிருந்து தெரிகிறது.

ஒரேயொரு எம். பி. யை மட்டும் கொண்டிருக்கும் சிஹல உறுமய கட்சி.தான் நம்பிக்கையில்லாப்பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளப்போவதில்லை என்று அறிவித்திருக்கிறது.

## க.பொ. த. உயர் தர. மாணவர்க்கான. . . .

உயிரியல் (4 ஆம் பக்கத் தொடர்சி]

தாக்க வீதம்-நேர்விகிதசமன் 1/t
தாக்க வீதம்-நேர்விகிதசமன்:-வெப்பநிலை;
வெப்ப நிலை-நேர்விகிதசமன் 1/t
எனவே 1/t எதிர் வெப்பநிலை வரைபு வரையப்பட்டு தாக்க வீதமாற்றம் அறியப்படும்;

### சுக்கிரேசுக்கரைசலின் தொழிற்பாடு

5 ml 10% சுக்குரோசுக் கரைசல், 5 ml 10% சுக்கிரேசு நொதியம என்பன வெவ்வேறு சோதனைக் குழாய்களில் எடுக்கப்பட்டு குறிப்பிட்ட ஓர் வெப்ப நிலையில் நீர்த் தொட்டியில் வைத்திருக்கப்படும் இரண்டும் ஒரே வெப்ப நிலையை அடைந்ததும் ஒன்றுடன் ஒன்று கலக்கப்பட்டு நிறுத்தற் கடிகாரம் உடனடியாக ஆரம்பிக்கப்படும். 10 நிமிட நேரம் தாக்கம் நிகழ விடப்பட்ட பின்னர் தாக்கக் கலவையானது கொதிநீர்த் தொட்டியினுள் வைக்கப்பட்டு நொதியத் தாக்கம் உடனடியாக நிறுத்தப்படும் பின்னர் தாக்கக் கலவைக்கு பீலிங்கின் கரைசல் இட்டு வெப்பமாக்கும் போது தோன்றும் வீழ்படிவின் செறிவு அறியப்படும்:

தாக்க வீதம்-நேர்விகிதசமன் வீழ்படிவின் செறிவு
எனவே வெப்ப நிலையை மாற்றி மாற்றி மேற்படி செய்முறை மேற்கொள்ளப்படும்.
வீழ்படிவின் செறிவை Y அச்சிலும் வெப்ப நிலையை X அச்சிலும் இட்டு வரைபு அமைக்கப்பட்டு தாக்கவீத மாற்றம் அறியப்படும்;

v நொதியத் தொழிற்பாடானது PH, வெப்பநிலை, நொதியச் செறிவு, கீழ்ப்படைச் செறிவு விளைபொருட்களின் செறிவு. நிரோதிகள், தூண்டிகள் போன்றவற்றால் பாதிக்கப்படும்;

1) PH:-வெப்பநிலை மாறாமல் இருக்கும் போது ஒவ்வொரு நொதியமும் தமக்கெனத் தனித்துவமான சிறப்பு PH பெறுமானத்தைக் கொண்டிருக்கும். இச்சந்தர்பத்திலே இவற்றின் தாக்க வீதம மிகவும் உயர்வாகக் காணப்படும். சிறப்பு PH பெறுமானத்திலும் பார்க்க PH குறையும் போது அல்லது கூடும போது நொதியத்தாக்க வீதமும் குறையும். பெரும் பாலான நொதியங்கள் நடுநிலை PH இலே உயர்வான தாக்கவீதத்தைக் கொண்டிருக்கும்;

(அடுந்த சனி தொடரும்)

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

### ★ அரசகுமாரிக்கும் திருட்டு ஆசை

திருட்டு என்பது அன்றாடம் நடை பெற்றுக்கொண்டிருக்கும் ஒரு நிகழ்வு தான். ஆனால் பெரிய திருட்டுக் கும்பலுக்கு அரசகுமாரி ஒருவரே தலைவர் என்றால் ஆச்சரியப் பட வேண்டியது அவசியம் தானே!

சவூதி மன்னரின் மைத்துனியான ஹின்ட் அல்பாஸியா என்பவரே அந்த மகா திருடி ஆவார் பாஸியாவின் கணவர் சவூதி அரேபியாவின் நான்காவது முடிக்குரிய இளவரசர் என்றால் நம்ப முடிகிறதா?

எகிப்து சென்ற அரசகுமாரி அங்கு ஆடம்பரஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கி இருந்து தனது திருட்டுக் கும்பலை வழி நடத்தியுள்ளார். 13 மில்லியன் டொலர் நகையை இவரது வழி காட்டலின் கீழ் உள்ள கும்பல் திருடிக்கொண்டிருந்த சமயம் பொலிஸார் சுற்றி வளைத்ததில் இவரது திருட்டு வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. தற்போது அரசிளங் குமாரிக்கு இரு வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

### ★ செய்யும் தொழிலே தெய்வம்

ஜப்பானில் தொழிற்சாலைகளில் பணி புரியும் பெண்கள் வேலை முடிந்தவுடன் தங்களின் இயந்திரங்களின் முன்னே மரியாதையாக நின்று அவற்றுக்கு நன்றி தெரிவித்த பின்னர் தானாம் வீடு செல்வார்கள்.

இதேபோல காலையில் தொழிலுக்கு போனவுடன் இயந்திரங்களுக்கு வணக்கம் சொல்லி வேலையை ஆரம்பிப்பதும் அவர்களின் வழக்கமாக இருக்கின்றது. ஜப்பான் இயந்திரங்கள் கொடுத்து வைத்தவை தான்!

அவதானி

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப் பது இல்
குறள்

# வலம்புரி

## பூரண ஹர்த்தால் தந்த பாடம்

தமிழ்ப்பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகளைக் கண்டித்து நேற்று வடக்குக் கிழககில்நடந்தபூரண ஹர்த்தால் காத்திரமான வெற்றியைத் தந்துள்ளது. தமிழினம் அடக்குமுறைக்கெதிராகதமது ஆத்மார்த்தமான ஆதரவை வழங்குவதில் பின்நிற்கமாட்டார்கள் என்பதையே இக் ஹர்த்தால், கதவடைப்பு வெளிப்படுத்தியுள்ளது.

பத்துத் தமிழ்க் கட்சிகள் உட்பட அரச சார்பற்ற பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டசாத்வீகப் போராட்டம் முழுமையான வெற்றியைத் தந்திருப்பதன் மூலம் தமிழ் மக்கள் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அமைப்புகளுக்கு ஓர் பகிரங்கமான செய்தியை மௌனமாகத் தெரியப் படுத்தியுள்ளனர். அச் செய்தி எதுவெனில்' தமிழ் அமைப்புக்களிடையே ஒற்றுமை வேண்டும். நீங்கள் ஒன்றுபட்டு - ஒன்றுதிரண்டு உரிமைக்காகக் குரல் கொடுக்க வந்தால், அதற்கு நீங்கள் கேட்காமலே நாம் ஆதரவு தருவோம். அதே வேளை தமிழ் அமைப்புகளாகிய நீங்கள் மனித உரிமைகளை மீறாமல் இருக்க வேண்டும்' என்பதே அச் செய்தியாகும்.

இதை விட அரச சார்பற்ற பொது அமைப்புகளுக்கும் ஹர்த்தாலை வெற்றியடையச் செய்ததன் மூலம் உணர்வு பூர்வமான - ஆழப்பதிந்துள்ள மன எழுச்சியை மக்கள் வெளிக்காட்டியுள்ளனர். அது என்னவெனில் மனித நேய அமைப்புகள் - அரச சார் பற்ற நிறுவனங்களென்ற நிலையில், மதங்களை முதன்மைப்படுத்தாதீர்கள், தனிப்பட்டசெல்வாக்கைத் தேட முயலாதீர்கள். வெளிநாட்டுத் தூதர்கள் வரும் போது அகதி முகாம்களைக் காட்டுங்கள். அதனை விடுத்து கல்லூரிக் கட்டடங்களைத் திறந்து களியாட்டம் காட்டாதீர்கள்.

மக்கள் சாகக் கிடக்கும் போது மதம் மாற்றும் மடமையைச் செய்யாதீர்கள். இவ்வாறு நீங்கள் நடந்து கொண்டால் நாங்கள் மட்டும் வேறானவர்களா உங்கள் பாதையில்- உங்கள் வழிகாட்டலில் எங்கள் உரிமைக்காக- எங்கள் அனைவரினதும் உரிமைக்காகப் போராடப் பின் நிற்கமாட்டோம்என்பதே அதுவாகும்.

# நாட்டுக் கூத்து நிலையினைக் காட்டுகின்ற அரசுமீதான நம்பிக்கையில்லாப்பிரேரணை

பாராளு மன்றத்திலுள்ள பெரும்பான்மை எம் பிக்களின் நம்பிக்கையை அரசாங்கம் இழந்துவிட்ட நிலையில் நம்பிக்கைமிக்க வேறு ஒரு தலைமையைத்தெரிவு செய்வதற்கு வாய்ப்பளிக்கும் நோக்கில் எதிர்க்கட்சி வரிசையிலிருந்து நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று கொண்டு வரப்படுவதும், அது நிறைவேறினால் ஒன்றில் பாராளுமன்றம் கலைக்கப் பட்டுபுதிய தேர்தல்கள் நடைபெறுவதோ அல்லது பெரும் பான்மைப் பலமுள்ள எதிர்க்கட்சியொன்றின் தலைவரை அழைத்து அரசை அமைக்கும்படிஜனாதிபதி கேட்பதோ தான் சம்பிரதாயமாகும்.

### நெருக்கடி

இன்றைய நிலையில் அரசு ஆட்டம் கண்டுள்ளது. அது நாட்டின் எரிந்து கொண்டிருக்கும் நெருக்கடியான பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முடியாமல் தத்தளிக்கின்றது. ஒரு சில எம்.பிக்களின்பெரும்பான்மையை வைத்துக் கொண்டு தந்திரத்தால் கடந்த எட்டு மாதங்களாக நாட்டை ஆட்சிபுரிந்து வந்தது 88 அமைச்சர்களை நியமித்து எம்.பி.க்களை கட்சி மாறாமல் செய்வதற்கு நாட்டின் பணத்தை விரயம்செய்வதும் எதிர்க்கட்சிகளின் எம்பிக்களை சுழியோடித்தேடியதும், தேசிய அரசை பொ.ஐ. முன்னணியும் ஐ.தே.க.வும் இணைந்த அமைக்கப் போவதாக போக்குக்காட்டி எதிர்க் கட்சிகளின் எம் பிக்களுக்கு உளவியல் சோதனை வைத்ததும் போன்ற பல முயற்சிகள் செய்ததை யாரும் அறிவர்.

ஒக்டோபர் தேர்தல்நடந்து முடிந்த கையோடு, முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவுடன்அரசமைக்கும் திட்டம் ஐ.தே.க வுக்கு கைகூடவில்லை. ஆனால்மு. கா. வுடன் கொள்கை உடன் பாடு இருந்தது அதாவது ஐ.தே.க வின் சுதந்திர ஆணைக்குழுக்கள் அமைக்கும் பிரதான கோரிக்கையை மு கா. தனதுகோரிக்கையாக பொ ஐ முன்னணி அரசிடம் முன்வைத்து. அதற்காக 100 நாட்கள் காலக் கெடுவும் கொடுக்குமளவுக்கு ஐ.தே.க.வுடன் மு.காவுக்கு கொள்கை உடன்பாடு இருந்

ரூசி

தது. அரச தரப்பில் மு கா. வின் கோரிக்கை பிசுபிசுத்துப் போனாலும், ஐ தே.க சுதந்திர ஆணைக் குழுக்கள் தொடர்பான கோரிக்கைகளை மேலும் முன்னெடுத்து முக்கிய கோரிக்கையாக முன்நிலைப்படுத்தி நிற்கிறது;

### உளவியல் போர்

அதுமட்டுமன்றி, ஒருசிலவாக்குகள் பெரும்பான்மையில் உயிர் வாழ்ந்துகொண்டிருந்த அரசை பதவியிறக்குவதற்கு தேவையான எம். பிக்கள் தொகை இல்லாதிருந்த இவ்வளவு நாட்களிலும் கூட ஐ தே.க. ஒருஉளவியல்போதை எம்.பிக்கள் மத்தியில்நடத்தி வந்தது அதாவது, ந இ.பிரேரணைக்குஅரசதரப்பிலிருந்து ஆதரவு கிடைக்கிறது. சிரேஷ்ட அமைச்சரொரு வரும பலஎம் பிக்களும் எமது பிரேரணைக்கு ஆதரவுதருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்று ஐ தே.க. பகிரங்கமாகவே அடித்துக்கூறி வந்தது இதே வேளை ரவூப் ஹக்கீம் முன்வைத்த100நாட்கள காலக்கெடுவும் முடிவடைந்ததால், சுதந்திர ஆணைக்குழுக்கள்விடயத்தில் அரசு அக்கறை காட்டாமை, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிறகு மாவனல்ல சம்பவம் போன்றவற்றினால்விரக்திபடைந்திருந்தமுஸ்லிம் காங்கிரஸ் ஒரு வேளை ஐ தே க. வுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு வெளியேறலாம் என்று மக்களை பொதுவாக நம்பவைத்தது இந்த பிரசார நடவடிக்கை ஜனாதிபதியும் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில பொறுப்பில்லாமல் நடந்ததாக ஹக்கீம் மீது சீறி விழுந்து தாமும் இவரையே வெள்ளாட்டுக்கூட்டத்தில்ஒரு கறுப்பு ஆடென்று கண்டுவைத்திருப்பது போல குறித்துக் காட்டினார். விடுதலைப்புலிகள் பெருந்தொகை பணத்தோடு முக்கிய அமைச்சரை எதிர்க்கட்சி பக்கம் இழுப்பதற்கு காத்திருப்பதாக தனக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் கூறினார். அப்போது ஹக்கீம் ஆத்திரமடைந்து சில வார்த்தைகள் பேசியபோது தொப்பிஅளவில்லா விட்டால் விடவேண்டியதுதானே என்று கூறியதுடன் அன்றைய பிரச்சினை ஒப்ந்தது உண்மையில் ஜனாதிதி வீசிவிட்டிருந்த தொப்பியை ஹக்கீம்எடுத்துப் போட்டிருக்க வில்லை. ஆனால் ஐ தே க. வீசிவிட்டிருந்த தொப்பியை ஆளும் கட்சித்தலைமையே எடுத்து அணிந்துகொண்டது ஐ.தே.க வுக்கு மாறிச் செல்லும் அந்தச் சிரேஷ்ட அமைச்சர் யார் என்று அவர்கள் கண்களை அகல விரித்துத் தேடத் தொடங்கினர். அதன் விளைவே அமைச்சர்பதவியில் இருந்துராவூப் ஹக்கீமைவீசச் செய்தது. ஐ. தே. க வின் உளவியல் போருக்கு வெற்றி கிட்டியது. கிணறு தோண்டிய போது பூதம் வெளிக்கிளம்பியது. உண்மையில் ஹக்கீம் வெளியேறும் விருப்பத்திலிருக்க வில்லை என்பது அவர் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக பின்னர் வெளியிட்ட அறிக்கையிலிருந்து தெரிகிறது

### மாற்றுவதில் அர்த்தமில்லை

இப்போது எதிர்க்கட்சி வரிசையிலிருக்கும் மு. கா. வின் தலைவர் நம்பிக்கையில்லாப் பிரச்சினைபற்றி தன் மனதில் இருந்தவற்றை கடந்தவாரம் வெளிப்படுத்திக் காட்டியிருத்தார். தான் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்கப் போவதில்லையென்றும், இதில் தான் கையொப்பமிட்டிருக்கவில்லை யென்றும் ந. இ. பி: விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸை சம்பந்தப்படுத்த வேண்டாமென்று ஐ தே. க. விடம் கேட்டிருந்ததாகவும் அறிக்கை வெளியிட்டிருந்தார். மேலும் முக்கிய பிரச்சினையாக இருப்பது தேசிய நல்லிணக்க சர்வ கட்சி அரசு ஒன்றேதான் என்றும் தெரிவித்திருந்தார். அதற்கான உறுதிநிலை இல்லாமலிருக்கும்போது அரசாங்கங்களை மாற்றுவதில் அர்த்தமில்லை என்பதே அவரது கருத்தாகவிருக்கிறது. அவரது கவனம் சலசலப்பை ஏற்படுத்துவதில் இல்லை. குறியிலக்கில் கவனமாயிருக்கிறார் என்பதும் புரிகிறது.

இன்றைய கட்சி நிலவரப்படி அரசாங்கத்திற்குசார்பாக 109 எம். பி. க்களும் எதிராக 114 பேரும் உள்ளனர். இவர்கள் யாவரும் பிரேரணையை ஆதரித்தால் அரசு பதவியிறங்கும் என்பது சரியே.

[6 ஆம் பக்கம் பார்க்க]

# இன்று 79வது சர்வதேச கூட்டுறவாளர் தினம்

79 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை யொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப் படுகிறது. (ஆர்)

கூட்டுறவு இயக்கம் முதலாளித்துவ நாடுகளிலும் சரி, சோசலிஷ சமவுடமை நாடுகளிலும் சரி, பின்தாங்கியவளர்முக நாடுகளிலும் சரிஉலகளாவிய ரீதியில் மாபெரும்இயக்கமாக அபிவிருத்தியடைந்து வந்துள்ளது. எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும், சாவல்களுக்கு மத்தியிலும், அர்ப்பணிப்புக்களைநல்கிய றொபேர்ட் ஓவன், டாக்டர் வில்லியம்கிங், வன்சிஸ் ராட்நிர், றொச்டேல் முன்னோடிகள், ரபேசன் சூல்ஸ் டிலிக்ஸ், லெனின், பெரியார் வீரசிங்கம் போன்றவர்களின் கூட்டுறவுப் பணிகளை கௌரவிக்கவும் அவர்களை நினைவு கூரவும் அகில உலக கூட்டுறவாளர்கள் விசேடமாக இத்தினத்தை கொண்டாடி வருகிறார்கள்.

கூட்டுறவாளர் தினம் அகில உலக கூட்டுறவு சம்மேளனம் 1922 ஆம் ஆண்டு தொடக்கம் பிரதி வருடமும் யூலைமாதத்தின்முதல்வாரத்தில் வருகின்ற சனிக்கிழமைகளில் சர்வதேச கூட்டுறவாளர் தினமென பிரகடனப் படுத்தி, அதனை விசேட தினமாக அனுஷ்டிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த வகையில் இன்று அனுஷ்டிக்கப்படும் கூட்டுறவாளர் தினம் 79 வது சர்வதேச கூட்டுறவாளர் தினமாகும்.

உலகிலுள்ளசுமார் 50கோடிக்கும்அதிகமான கூட்டுறவாளர்கள் கடந்த 78 ஆண்டுகளாக இத்தினத்தை ஐக்கியநாடுகள் தினம், மகளிர் தினம் தேசிய வீரர் தினம், சிறுவர் தினம் போன்று விசேட தினமாக அனுஷ்டித்து வருகின்றார்கள்.

உலக கூட்டுறவு அமைப்புக்கள் அவற்றின் மூலமாக உருவாக்கப்பட்ட அரசியல் பொருளாதார சமூக கலாசார சாதனைகளையும் உலக மக்கள் நினைவு கூரவும், கூட்டுறவு தொடர்பான பிரசாரங்களை மேற்கொள்ளவும் இத்தினத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

இத்தினத்தில் பொதுமக்களிடையேயும் பாடசாலை மாணவர்களிடையேயும் கூட்டுறவு இயக்கம் தொடர்பாக கட்டுரை, கவிதை, பேச்சு, நாடகம் போன்ற போட்டிகளையும் விளையாட்டுப்போட்டிகளையும் கூட்டுறவு தொடர்பான விரிவுரைகளையும், படக்காட்சிகளையும்நிகழ்த்தி கூட்டுறவின் மகிமையை பறைசாற்றி வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

யூலை மாதம் முதலாம் லாம் திகதி தொடக்கம் முப்பத்தோராம் திகதி வரைஉலகெங்கும் உள்ள கூட்டுறவு அலுவலகங்களிலும்விற்பனை நிலையங்களிலும் கூட்டுறவு வாகனங்களிலும் வானவில்லின் ஏழு வர்ணங்கள்பொருந்திய கூட டுறவுக்கொடி பறக்க விடப்பட்டிருக்கும்.

உலகிலுள்ள கூட்டுறவு அமைப்புக்கள் யாவும் இணைந்து இத்தினத்தை கொண்டாடி வருகின்றன. ஒருகாலத்தில் இலங்கையில் வடபகுதி கூட்டுறவின் முன்னோடியாகத் திகழ்ந்து வந்தது. கூட்டுறவுப்பெரியார் வீரசிங்கம் போன்ற பல கூட்டுறவாளர்களின் அயரா உழைப்பினால் வடபகுதி கூட்டுறவினால் செழுமை பெற்றது. அக்காலங்களில் இங்கு கொண்டாடப்பட்ட கூட்டுறவுத்தினவிழா கண்ணுக்கும், கருத்துக்கும் இனிய விருந்தளித்துவந்தன.

இன்று நாட்டில் நிலவும் யுத்த சூழ்நிலையை காரணம் காட்டி கூட்டுறவாளர் தினத்தை யாழ்ப்பாணத்தில் உள்ள கூட்டுறவாளர்கள் கொண்டாடுவதற்கு எதுவித நடவடிக்கைகளையும் எடுக்காது இருப்பது மனவருத்தத்தை தரும் செயலாக அமைந்துள்ளது.

இன்றைய சூழலில் யாழ் மாவட்டத்தில் பல விழாக்கள் பெருந்தொகை பணத்தைச் செலவு செய்து கொண்டாடப்படுகின்றன. இக் கொண்டாட்டங்களுக்குப் போர்க்காலச் சூழல் தடையாக அமையவில்லையா?

கூட்டுறவாளர் தினத்தை ஆடம்பரமாக கொண்டாடும்படி எந்தக் கூட்டுறவு அமைப்பும் கூட்டுறவாளர்களுக்கு அழைப்பு விடுக்கவில்லை. நடைமுறைச் சாத்தியமாகக் கூடிய வகையில் கிராமப்புற ரீதியில், பிரதேச ரீதியில், மாவட்டரீதியாக இயங்கிவரும் கூட்டுறவு அமைப்புக்கள் தங்கள் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் சனசமூக நிலையங்கள் கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஊடாக கூட்டுறவு சம்பந்தமான பிரசாரங்களை மேற்கொள்ள எவரும் எவ்வித தடையும் விடுக்கவில்லை.

இந்நிலையில் அடக்கமான முறையில் சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை கொண்டாடுவதற்கு இன்றுள்ள கூட்டுறவு தலைமைத்துவத்தை அலங்கரிக்கக்கூடிய கூட்டுறவாளர்கள் முன்வராதிருப்பது ஏன் என்று தெரியவில்லை.

பிற வர்த்தக அமைப்புக்களுக்கும் கூட்டுறவு விற்பனை அமைப்புக்களுக்குமிடையே பாரிய வேறுபாட்டை ஏற்படுத்தக் கூடிய வகையில் வருடந்தோறும் வருகின்ற யூலை மாதம் பூராகவும் ஏழுவர்ண கூட்டுறவுக் கொடியை ஒவ்வொரு கூட்டுறவு நிறுவனங்களிலும் பட்டொளிவீசி பறக்கவிட்டு யாழ். மாவட்டத்தில் தற்போதும் கூட்டுறவாளர்கள் இருக்கின்றார்கள் என்பதை பறைசாற்ற வேண்டும்.

இந்த வேண்டுகோள் யாழ். மாவட்ட இன்றைய கூட்டுறவாளர்கள் அனைவருக்கும் சமர்ப்பணம்.

·கூட்டுறவாளன்

# எமது மண்ணையும் மக்களையும் ஆக்கிரமிக்கும் படையினரை அழிக்கும் நடவடிக்கை தொடரும்

## முஸ்லிம்களுக்கு விடுத்த எச்சரிக்கையில் புலிகள் தெரிவிப்பு

(வவுனியா)

காத்தான் குடியில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் சயனைட் உட்கொண்டு உயிரிழந்த சம்பவம் தொடர்பாக முஸ்லிம் சமூகத்திற்கு ஓர் எச்சரிக்கை' என்ற தலைப்பில் விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் துறையினர் விடுத்த அறிக்கை இங்கு தரப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தங்களது சாவையே தூசாகக் கருதி எங்கள் தலைமுறைக்குள்ளேயே எமது தாயகம் விடிவு பெற வேண்டும்-வெற்றி பெற வேண்டும் என்ற உறுதியுடன் களத்திலே உலாவந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் கடந்த 24-06-2001 அன்று எங்கள் மண்ணில் காத்தான்குடி முஸ்லிம் மக்களை ஆக்கிரமித்து நின்ற சிறிலங்காப் படையினர் மீது எமது போராளி ஒருவர் கைத்துப்பாக்கியினால் தாக்குதல் நடாத்தியுள்ளார்.

இதன்போது தாக்கிய போராளியைத் தப்பிச் செல்லவிடாது சுற்றி வளைத்துக் கல்லால் எறிந்து காயப்படுத்தியுள்ளார்கள் காத்தான்குடி முஸ்லிம் மக்கள் இதனால் ஆற்றலும் அனுபவமும் மிக்க போராளி ஒருவர் சயனைட் அருந்தி வீரச் சாவு அடைந்துவிட்டார்.

விடுதலைப் போருக்கு எதிராக முஸ்லிம் மக்கள் புரிந்த இத்துரோகச் செயலை மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

பாதுகாப்பு எனும் போர்வையில் எமது மண்ணையும், மக்களையும் ஆக்கிரமித்துநிற்கும் பாதுகாப்புப் படைகளை அவர்களது தங்கும் இடங்களிலேயே சந்தித்துதேடி அழிக்கும்நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் நடாத்துவோம்.

எமது தமிழீழ மண் விடுதலைபெறும் அந்தக் கணத்திலேயே சகல ஒடுக்கு முறை விலங்குகளும்உடைக்கப்பட்டு ஒரு சமூக விடுதலை மலர்ந்து இனக்குழுக்களிடையே சகோதரத்துவம் நிலைத்திட இப்போராட்டம் முடிவு காண வேண்டும் என்றே ஒவ்வொரு விடுதலைப் போராளியும் விரும்புகின்றான்.

ஆதலால் முஸ்லிம் சமூகம் விடுதலைப் போராட்டத்தையும் போராளிகளையும் காட்டிக் கொடுக்கும் துரோகத்தனம் தொடர்ந்து கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்தி நிரந்தமான ஆக்க பூர்வமான பயனுள்ள முடிவுகளைஎடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்

இவ்வாறு அவ் வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மாணவன் திவ்வியன் கைது விநாயகமூர்த்தி கண்டனம்

(கொழும்பு)

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடமாணவன் திவ்வியன் இராணுவத்தினரால் அனாவசியமான முறையில் கைது செய்யப்பட்டமையை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும், யாழ் மாவட்ட எம். பியுமான அ. விநாயகமூர்த்தி வன்மையாகக் கண்டித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவன் கைது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது அவசரகால நிலை பாராளுமன்றத்தினால் அங்கீசரிககப்படாத பட்சத்தில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் விடுதலைப் புலிகளை தடைசெய்திருப்பதக ஜனாதிபதி அறிவித்திருப்பது சட்டப்படி செல்லுபடியற்றதாகும். இது தொடர்பாக அமைச்சர் ஜி எல். பீரிசுடன் தொடர்பு கொண்டு எடுத்துக்கூறிய போது அவர் இதனை ஏற்றுக்கொண்டார்.

எனவே அரச படைகள் அரசின் ஏவலாளிகளாக இருந்து அனாவசியமான விடயங்களில் ஈடுபடக்கூடாது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் யாரையாவது கைதுசெய்வதாக இருந்தாலும் அக்கைது பொலிஸ் அத்தியட்சகர், அல்லது பொலிஸ்இன்ஸ்பெக்டரின்ஒப்பந்தத்துடனான உத்தரவின் பேரிலேயே மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

### வவுனியா

பால வவுனியா நகரம் ஆளரவம் அற்று வெறிச்சோடிக் காணப்பட்டது. சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள் எதுவும் இயங்கவில்லை. வங்கிகள யாவும் மூடப்பட்டிருந்தன. அரச அலுவலகங்கள யாவும் செயலிழந்து காணப்பட்டது. போக்குவரத்து சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

வவுனியா நகரில் பாதுகாப்புப்படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை - புளொட் அமைப்பைச் சேர்ந்த இருவர் பொலிஸாரின் தாககுதலுக்குள்ளானார்கள் என்றும தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

ராஜா
யாழ்ப்பாணம்
லக்கிஸடார் அஜித்
(9 வேடங்களில)
வசுந்தராதாஸ்,
மீனா, நக்மா
மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்
சிட்டிசன்
தினசரி: 10-30, 2-00
5 00 [பு நே]
(கி-2125)

### ராமதாஸ் வெளியேற்றம் -

பாட்டாளிமக்கள் கட்சி அதிமு.க கூட்டணியில் இருந்து வெளியேறிவிட்டதென்றும் ஜெயலலிதாவுடனான சகலஉறவுகளும் முறிந்துவிட்டதென்று பமா ம.க. தலைவர் டாக்டர்ராமதாஸ் அறிவித்துள்ளார்.

நான்பட்ட அவலங்கள் போதும் இனிஜெயலலிதாவுடன் ஒருபோதுமேகூட்டு அமைக்கமாட்டேன் என்று டாக்டர்ராமதாஸ் கூறியுள்ளார். (ந-8)

### புலிகள் . . .

க- உயிரிழந்துள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர்.அவர்களின்பெயர் விபரம வருமாறு.

★ ராயு
(சின்னத்தம்பி கனகசுதா யாழ்ப்பாணம்)

★ சுதாகர்
(விஜயசுந்தரம் சுதாகரன் யாழ்ப்பாணம்)

★ உதயராஜ்
(நாகராஜா உதயராஜா விஸ்வமடு)

இதே வேளை கடந்த 4ஆம் திகதி இடம் பெற்ற வெடி விபத்தல்,

★ செந்தாளன்
(கந்தையா சுதன் யாழ்ப்பாணம்)

என்ற போராளியும் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள அறிவித்துள்ளனர். (ந-5)

## சிஹல உறுமயவுடன் இணைந்து தேசிய அரசை அமைக்க அழைப்பு

ஐ.தே.க விலும் பொ.ஐ முன்னணியிலுமஉள்ள தேசியவாதிகள் சிஹல உறுமயவில் இணைந்து தேசியவாத அரசொன்றை அமைக்க முன்வர வேண்டுமென்று அதன் எம்.பி சம்பிகா ரணவாக்க கூறியுள்ளார்.

தாம் இதுதொடர்பாகஇரு கட்சிகளினதும் உறுப்பினர்களுடனும்பேசிவருவதாகவும் அவர் தெரிவித்தார்

சிஹல உறுமயவின் முன்நாளஎம் பிதிலக்கருணாரத்ன கூறுகையில் சிங்களவர்களின் ஒற்றுமைமூலமேஇதனைநாம் சாதிக்க முடியும்என்றும், 'சிங்களயனிசமகிவவு' (சிங்களவர் ஒன்றுபடுவோம்)என்னும் பிரச்சாரஇயக்கத்தை நாம்யூலை 11ம்திகதி தொடக்கிவைக்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்திற்கு தாம் ஆதரவு தருவதாகவும் ஆனால் நம்பிக்கை யில்லாப் பிரேரணை விடயத்தில் அவ்வாறு செய்யமுடியாதென்றும் செய்தியாளர் மாநாட்டில் அவர்மேலும் தெரிவித்தார்.

### இரண்டு . . .

ளுக்கு ஒததி வைக்கலாமென்றும் அதனையும் ஓகஸ்ட் 6ம் திகதியன்றே அறிவிக்கப் படுமென்றும் அதிகார பூர்வவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அரசியற்சட்டம் வழங்கும் அதிகாரங்களின் படி ஜனாதிபதி 10நாட்களுக்கொருதடவை 30 நாட்கள் வரையானகாலப்பகுதிக்கு அவசரகாலத்தை பிரகடனம் செய்ய முடியும் என்று அரசதரப்பு தெரிவிக்கின்றன. இதற்கு பாராளுமன்ற அங்கீகாரம் தேவையில்லை யென்றும் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும யூலை 14 ஆம் திகதி வெளியிடப் படக்கூடிய இப் பிரகடனத்தை பாராளுமன்ற அங்கீகாரமின்றிஅமுல்படுத்த முடியாது என்று ஐ தே.க வின்சட்டநிபுணர்கள தெரிவிக்கின்றனர். (ந)

### ஆட்டம்

கள யாவும் முற்றாகப்பூட்டப்பட்டு இருந்தன.

போக்குவரத்து சேவைகள் வழமைபோல் நடைபெறவில்லை. பாடசாலைகள், வங்கிகள், அரச அலுவலகங்கள் (செயலகம் உட்பட) கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு அமைப்புகள் முற்றாக இயங்கவில்லை. நகரப்பகுதிக்குள் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன;

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம், நெல்லியடிசந்தைகள் கூடவில்லை;

யாழ்நகரில் 11 மணிக்கு பிற்பாடு வர்த்தக நிலையங்களைத் திறக்குமாறு பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோள் விடுத்தபோதிலும் வர்த்தகநிலையங்கள் எவையும் திறக்கப்படவில்லை.

யாழ்போதனா வைத்தியசாலை மற்றும் அரச மருந்தகங்கள் திறந்திருந்தபோதும் வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவு, மற்றும் கிளினிக்குகள் யாவும் முற்றாக இயங்கவில்லை.

யாழ் செயலக புனர்வாழ்வுப் பிரிவின் உணவுக்களஞ்சியங்கள் யாவும் பூட்டப்பட்ட நிலையில் இருந்தமையால் எந்தவிதமான உணவு விநியோக வேலைகளும் நடைபெறவில்லை.

இது இவ்வாறிருக்க யாழ் குடாநாட்டில்நேற்றையதினம் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன; இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

கொழும்பு கோட்டைப் புகையிரத நிலைய முன்றலில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமான மூவின மக்களும் கலந்துகொண்டனர், கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் தமிழ், முஸ்லிம் வர்த்தக நிலையங்கள பூட்டப்பட்டிருந்தன.

கொழும்பில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தை அடுத்து போக்குவரத்து சில மணி நேரம் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. (வ)

### தமிழகம் சென்றனர்

ஈழத்தமிழ் அகதிகள் 15பேர் இராமேஸ்வரத்தில்கரைசேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை ஏற்றிச் சென்ற படகு சிறு தீவு ஒன்றில் இறக்கிவிட்டுச் சென்றதாகவும் தமிழக மீனவர்கள் இவர்களை காப்பாற்றிகரைசேர்த்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கொடும்பாவி எரிப்பு

மட்டக்களப்பு சம்மாந்துறையில் நேற்றுநடந்தஆர்ப்பாட்டத்தில் அமைச்சர் பேரியல் அஷ்ரப் மற்றும் முன்னாள் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா ஆகியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டது

தேசிய ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் எம்.பியான சேவி யவுத் பசீர் ஐக்கிய முன்னணியில் இருந்து விலத்தப்பட்டதை ஆட்சேபித்து நடைபெற்ற ஊர்வலத்தின்போதே இக்கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன. (வ)

### முடிவு .

விவாதம் நடைபெறுமாயின் அரசு ஆட்டம் காணும் என்பதை உணர்ந்துள்ள அரசுத்தரப்பு அத் திகதியைப் பிற்போடுமாறு வலியுறுத்தி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)



எழில் குன்றா அழகிய தங்க நகைகளை அசல் 22 கரட்டில்
செய்து பெற்றுக்கொள்ள யாழ் நகரில் . . . . .

நியூ நகுலா ஜுவல்லறி

74, கஸ்தூரியார் வீதி,- - - யாழ்ப்பாணம்,

நியூ லலிதாஸ் ஜுவல்லறி
171, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்,

[கி/2001]

நகுலாநகை மாடம்
24 G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

இப் பத்திரிகை "வலம்புரி" அச்சகம் கிராபஜத்தாரால் இல, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூலைமாதம் 07-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.